Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-22 | 07-12-2005 | புதன் கிழமை | ஓசை-293

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx
Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பி..
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835
(சி-13509)

# கிளைமோர் தாக்குதலில் இருபாலையில் 7படையினர் பலி!

## மற்றுமொரு சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

*யாழ். இருபாலைச் சந்தியில் இராணுவ உழவு இயந்திரம் ஒன்றின் மீது நேற்று முற்பகல் பத்து மணியளவில் இனம் தெரியாதோரால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். அத்துடன் மேலும் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.*



கிளைமோரில் சிக்கிய உழவு இயந்திரம் (41)

பருத்தித்துறை வீதியில் இருபாலைச்சந்தியிலிருந்து சுமார் 25 மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதியில் வைத்தே இராணுவ உழவு இயந்திரம் மீதான இக்கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

மேற்படி பகுதியில் உள்ளமரம் ஒன்றில் பொருத்தி வைத்தே இக்கிளைமோர் வெடிக்கச் வைக்கப்பட்டதாகவும், கிளைமோரினை வெடிக்க செய்தவர்கள் பதுங்கியிருப்பதாக எண்ணி அப்பகுதியில் இருக்கும் புதர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இக்கிளைமோர் தாக்குதலில் சிக்கிய இராணுவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயாசந்தகிரி மற்றும் இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் சரத் பொன்சேகா, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று திடீர் விஜயம்ஒன்றை மேற்கொண்டு யாழ். குடாநாட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்திலிருந்து இராணுவத்தை அகற்ற திருமலையில் ஹர்த்தால்

### -தமிழ்மக்கள் பேரவை அழைப்பு

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றுமாறு கோரியும் மூதூரில் தமிழ்மக்கள் கடத்தப்படுவதையும், படுகொலை செய்யப்படுவதையும் கண்டித்தும் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும், திருகோணமலை மாவட்டத்தில் ஒருநாள் ஹர்த்தால் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருக்கின்றது.

திருகோணமலை நியூசில்வர் ஸ்டார் ஹோட்டலில் நேற்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை ஒழுங்கு செய்த கூட்டத்தில் பேரவையின் தலைவர் வ.விக்கினேஸ்வரன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.இந்நிகழ்வுக்கு விக்கினேஸ்வரன் தலைமை வகித்தார்.

திருகோணமலை நகரில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவம் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு முஸ்லிம் இளைஞர்கள் மருதமுனையில் படுகொலை

(கொழும்பு)

மருதமுனையில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

மருதமுனை ஐயா வீதியைச் சேர்ந்த பாறூக் முகமட் றிஸ்வான் (வயது- 28), அபுல் முகமத் மிர்சான் ஆகியோரே கொலையுண்டவர்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் சென்ற இவர்கள் இருவரும் நேற்றுக்காலை பாண்டிருப்பு மருதமுனை எல்லைப் பிரதேசத்தில் இருந்துசடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

## இரு தமிழர்கள் கடத்தல்

(திருமலை)

மூதூர் பிரதேசத்தில் 58-59 மைல்களுக்கு இடையில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இரண்டு தமிழர்கள் வெள்ளைநிற வானில் வந்த சிலரால் கடத்திச் செல்லப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் படையினர் வெறியாட்டம் பத்துக்கும் அதிக பொதுமக்கள் காயம்

### -வர்த்தக நிலையங்களிலும் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இருபாலைச்சந்தியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கிளைமோர் தாக்குல் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவம் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் பத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் ஆறுபேர் மிகமோசமான தாக்குதல்களுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை படையினர் வீடு வீடாகப் புகுந்து நடத்திய தாக்குதல்களில் மேலும் பலர் காயமடைந்துள்ளபோதும் அவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முடியாதவாறு இராணுவம் சுற்றிவளைப்புக்களையும் வீதித்தடைகளையும் மேற்கொண்டதால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக மாணவர்கள் 2ஆவது நாளாகப் போராட்டம்

### - படையினரின் நடமாட்டங்கள் முற்றாக முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரி வளாகத்துள் இராணுவத்தினர் மண் அணைகளையும், பதுங்குகுழிகளையும் அமைத்து வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று இரண்டாவது நாளாகவும் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தினர். ஹாட்லிக் கல்லூரி மாணவர்களது இப்பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் மாணவர்களும் நேற்று முதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்ததால் வடமராட்சிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சம்பவங்கள் தொடர்பாக புலிகளுடன் விரைவில் பேச்சு

### -சிறிலங்காவின் புதிய இராணுவத்தளபதி -

(கொழும்பு)

யாழ். இல் நடைபெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாக சிறிலங்



காவின் புதிய இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்.இல் நடைபெறும் தாக்குதல்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். எனவே இத்தாக்குதல்கள் தொடர்பாக உட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சிகுடிச்சாறில் கருணா குழுவினர் நால்வர் சக உறுப்பினர் இருவரினால் சுட்டுக்கொலை

### -தாக்குதலை நடத்தியோர் புலிகளிடம் சரண்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம், கஞ்சிகுடிச்சாறில் நேற்று அதிகாலை 2.20 மணியளவில் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு முன்னரண்களிற்கு முன்னால் வைத்து கருணா குழுவின் முக்கியதஸ்தர்களான இனியபாரதி மற்றும் சுமன் உள்ளிட்ட நால்வரை, அவர்களுடன் சேர்ந்து வந்த இருவர் சுட்டுக்கொன்றுவிட்டு விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளதாக அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

கருணாகுழுவில் அங்கம் வகித்திருந்த ஞானதீபன் மற்றும் புகழ்வேந்தன் ஆகியோரே இவ்வாறு சரணடைந்தவர்களாவர்.

கருணா குழுவினர் மிக முக்கிய உறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த எழிலன் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் நேற்றும் சந்திப்பு

(திருமலை)

திருகோணமலை மூதூரில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையே நடந்து வரும் வன்முறைகளைத் தணிக்கும் வகையில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றும் நடைபெற்றது.

பள்ளிக்குடியிருப்பு முன்னரண் பகுதியில் நேற்று முற்பகல் பத்துமணிக்கு இந்தக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன், மூதூர் - தோப்பூர் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் லத்தீப் ஆகியோர் இந்தக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இங்கு நடந்த வன்முறைகள் தொடர்பில் தனது கண்டனத்தை எழிலன் தெரிவித்தார்.

சம்பூரில் இருந்து சென்று மூதூரில் காணாமல் போன ஐந்து தமிழர்களில் ஒருவர் பள்ளிவாசல் வளவு ஒன்றில் சேற்றுப்பகுதியில் புதைக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடத்தப்படும் பரீட்சை

**Srilankan Computer Driving Liecence**

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

தொடர்புகட்கு:

**வின்நெற் கணனி பயிற்சி நிலையம் டிப்போ வீதி, கிளிநொச்சி**

(சி.13074)

### புதியவகுப்புக்கள் ஆரம்பம்

கேம்பிறிஜ் கல்லூரி 2006ஆம் ஆண்டுக்கான புதியவகுப்புக்கள் ஆரம்பம் தரம் 5முதல் தரம்11 வரையான வகுப்புக்கள் தனித்துவமிக்க ஆசிரியர்குழாம் மூலம் கற்பிக்கப்படும். காலம் 07.12.2005 பிற்பகல் 04.மணி இடம் உதயநகர் மேற்கு, டிப்போ றோட், கிளிநொச்சி. நிர்வாகி எஸ்.ரி. ரூபன். (7076)

### தவறிவிட்டது

கந்தசாமி இராசமலர் என்பவருடைய தே.அ.அட்டைக்கு விண்ணப்பித்த சிட்டையும் இராசேந்திரம் சிறிதேவி என்பவருடைய நிரந்தர பயண அட்டையும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (7077)

### பசு மாடுகள் விற்பனைக்குண்டு

நல்லின பசுமாடுகள் ஆறு விற்பனைக்குண்டு. அவற்றை பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி யோண்கல்வி நிலையம்,முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு. (6957)

### கணினி இயக்குனர் தேவை

போட்டோ சொப், பேச்மேக்கர் ஆகியவற்றில் முன் அனுபவம் உள்ள ஆண்கள்தேவை. கிளிநொச்சி அறிவமுதுக்கு நேரில் வரவும். (சி-13486)


## திறந்த போட்டிப்பரீட்சை

கடந்த நான்காம்திகதி நடாத்தப்படவிருந்து ஒத்திவைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணபொதுச் சேவையின் முகாமைத்துவ உதவியாளர்(கைத்தொழில்) வகுப்பு II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திற்குச் சமுகமளிக்கும்படி வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் வே.பொ. பாலசிங்கம் அறிவித்துள்ளார் பரீட்சை நேரமும் காலை 09.00மணி முதல் 11.00மணி ஆகமாற்றப்பட்டுள்ளது.

# மழலைகள் கணினிப்பூங்காவின் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் மாணவர் அமைப்பினரால் நடாத்தப்படும் இலவச மழலைகள் கணினிப்பூங்காவின் இரண்டாம் தொகுதி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை 3.00 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டுமண்டபத்தில் இலவச மழலைகள் கணினிப் பூங்கா ஆசிரியர் பரஞ்சோதி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை மேஜர் முரளியின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை லட்சுமி, கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்ரர்,ஆசிரியர் மேரி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.





தமிழீழ தேசியக்கொடியினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து உரைகளை தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நளன், கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருள்மாஸ்ரர் ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து மாணவர்களின் ஆங்கிலப்பாடல், இசைவும் அசைவும், தனிநடனம் என்பன நடைபெற்றன.

அதனையடுத்து இரண்டாம் தொகுதி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 54 மாணவர்களுக்குமான சான்றிதழ்களை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் வழங்கிக் கௌரவித்தார்.இந்நிகழ்வில் பெற்றோர்கள், பொறுப்பாளர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு)

# பெண்களுக்கெதிரான வன்முறைக்கெதிராக வவுனியாவில் மனித சங்கிலிப் போராட்டம்

(வவுனியா செய்தியாளர்)

பெண்களுக்கெதிரான வன்முறைக்கெதிராக வவுனியாவில் மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

"மாற்றங்களை ஏற்படுத்துபவர்களை உருவாக்கல்" என்ற தொனிப் பொருளில் ஓக்ஸ்பாம் நிறுவன ஆதரவுடன் செயற்படுத்தப்படும் பெண்களுக்கெதிரான வன்முறைக்கெதிராக குரல் கொடுக்கும் செயற்றிட்டத்தின் ஓரங்கமாகவே இம்மனித சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.பெண்களுக்கெதிரான வன்முறையை வெளிக்கொணர்தல் செயற்றிட்டத்தில் பங்கெடுக்கும் சுமார் 1000 பேர் இதில் கலந்து கொண்டனர்.

வவுனியா காமினி மகாவித்தியாலய மைதானத்தில் ஒன்று கூடிய இவர்கள் வன்முறைக்கெதிரான சுலோகங்களைத் தயாரித்து அவற்றை தமக்கு வழங்கப்பட்ட ரீசேட்டுகளில் அணிந்துகொண்டு ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

பிற்பகல் 2.30 மணிக்கு காமினி மகாவித்தியாலய மைதானத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் மன்னார் வீதி,யாழ். வீதி, கொறவப்பொத்தான வீதி, கடை வீதி, கண்டி வீதி ஊடாகச்சென்று வவுனியா பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது. (10)

# நடமாடும் சேவை மூலம் ஊர்திகள் பதிவு செய்தல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரால் இதுவரை தமிழீழப் பதிவு மேற்கொள்ளாத ஊர்திகளுக்கு நடமாடும் சேவைகள் மூலம் பதிவுகள் மேற்கொள்ளப்பெற்று 2006ஆம் ஆண்டிற்கான வரி அட்டைகளும் வழங்கப்படவுள்ளது.

இன்று காலை நெடுங்கேணிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகத்தில் வைத்து காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையும் மேற்படி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று நாளை ஒட்டுசுட்டான் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகத்திலும், ஒன்பதாம் திகதியன்று முள்ளியவளை போ. க.பி. பிரதேச செயலகத்திலும், பத்தாம் திகதியன்று முல்லைத்தீவு போ.க.பி.பிரதேச செயலகத்திலும் குறிப்பிட்ட நேர அட்டவணையின் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகள் நடைபெறுமெனவும், ஊர்திகளுக்கான தமிழீழ பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய மேற்படி பகுதிகளிலுள்ள ஊர்தி உரிமையாளர்கள் அந்தந்தத் தினங்களில் குறிப்பிட்ட செயலகத்திற்கு சமுகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பரிசோதனைப் பகுதியினர் வேண்டியுள்ளனர். (சோ)

# கரைச்சிப்பிரதேச செயலக உப பணிமனையில் காணி விசாரணைக் கூட்டம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் கரைச்சிப்பிரதேச செயலக உபணிமனையில் காணி சம்பந்தமான விசாரணைக கூட்டம் எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது. கிளிநொச்சி கிழக்கு பகுதியில் உள்ள வட்டக்கச்சி சிவிக்சென்ரர், மாவடி, மாயவனூர்,இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் அரச காணிகளில் குடியிருப்போருக்கான அனுமதிப் பத்திரம் வழங்கலும், அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கான புதுப்பதிவுகளும் இடம்பெறவுள்ளன. அத்தோடு காணிகள் சம்பந்தமான பதிவினை மேற்கொண்டு அனுமதிப் பத்திரத்தைப் பெறாதவர்களுக்கும் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. மற்றும் காணி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## மானிய அடிப்படையில் பணஉதவி வழங்கல்

(முல்லைத்தீவு)

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியில் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் 24 பயனாளிகளுக்கு மானியஅடிப்படையில் சிறுதொகைப்பணம் வழங்கப்பட்டுள்ளது

மேற்படி நிதியுதவியானது கோயில்குடியிருப்பு கிராமமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (20)

## தங்கச்சங்கிலி ஒப்படைப்பு

(மல்லாவி)

நட்டாங்கண்டல் மகப்பேற்று மருத்துவமனை வளாகத்தில் அண்மையில் ஒன்றரைப் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி ஒன்றினை நட்டாங்கண்டல் பகுதியை சேர்ந்த ஆசிரியை திருமதி.நா. நகுலாம்பிகை என்பவர் கண்டெடுத்து மருத்துவமனை வைத்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

இவரை வைத்தியசாலை நிர்வாகத்தினர் பாராட்டியுள்ளனர். பொருளுக்கு உரித்துடையோரும் இத் தங்கச்சங்கிக்கு உரிய ஆதாரம் காட்டியுள்ளமையால் அவர்களிடம் சங்கிலி ஒப்படைக்கப்பட்டது. (24)

## குளத்தில் மூழ்கி இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை நெடுங்குளத்தில் குளிக்கச்சென்ற இளைஞர் ஒருவர் குளத்தில் மூழ்கி மரணமானார்.

பாலேந்திரம் பிரதீபன் (வயது-19) என்னும் இளைஞன் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற போது குளத்தில் மூழ்கி மரணமானார். நான்கு மணியளவில் இவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (33)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவிகளைப் புரிந்து வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சில கிராமங்கள் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்திருந்தன.

பன்னங்கண்டியில் 205 குடும்பங்களும்,சிவிக்சென்ரரில் 28 குடும்பங்களும், மாவடி ஜொனிபுரத்தில் -30 குடும்பங்களும், சாந்தபுரத்தில்354 குடும்பங்களும் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளன.கெயார் நிறுவனம், கியூடெக் நிறுவனம், போரூட் நிறுவனம், உட்பட பல்வேறு தொண்டுநிறுவனங்களும் இம்மக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளன. (12)

# வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போ.வ.சேவை குறித்து மக்கள் அதிருப்தி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவை நிறுவனம் நடாத்தும் ஓமந்தை வவுனியா பேருந்து சேவை குறித்து மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஓமந்தை -வவுனியா போக்குவரத்து சேவையில், தனியார் பேருந்து சேவையும், வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச்சேவை நிறுவனத்தின் பேருந்து சேவையும் நடைபெறுகின்றன. வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை நிறுவன பேருந்துகள் சேவையில் ஈடுபடும் நாட்களில் ஓமந்தையில் இருந்து வவுனியாவிற்கான முதலாவது பேருந்து மிகத் தாமதமாகவே புறப்படுவது குறித்தே மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஓமந்தை இராணுவ சோதனைநிலையம் காலை 7.00 மணிக்கு திறக்கின்றபோதும் அங்கிருந்து வவுனியாவிற்கான முதலாவது பேருந்து காலை 8.30 மணியளவிலேயே புறப்படுகின்றது. இதனால் வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவிற்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள், மாணவர்கள், அரச அலுவலர்கள் அத்தியாவசிய கடமைகளின் நிமித்தம் வருகைதரும் பொதுமக்கள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சம்பந்தப்பட்டோர் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (10)

# முன்பள்ளி மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

மாவீரர் இதயகீதன் முன்பள்ளி மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. காலை 10.00 மணிக்கு முன்பள்ளியில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்கான கௌரவிப்பு முன்பள்ளி ஆசிரியர் திருமதி பிரதீபா சத்தியசீலன் தலைமையில் ஞானிமடம் அ.த.க.பாடசாலையில் இடம்பெறும்.இதற்கான ஒழுங்குகளை பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுள்ளது (34)

# கரியாலை நாகபடுவானில் இன்று நோய்த்தடுப்பு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையினரினால் "வருமுன் காப்போம்" என்ற நோய்த்தடுப்பு நடவடிக்கை இன்று கரியாலை நாகபடுவானில் இடம்பெறவுள்ளது.கரியாலை நாகபடுவான் திட்டக்கிராமத்தின் பொதுநோக்கு மண்ட பத்தில் தமிழீழசுகாதார சேவையினரால் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் பற்சிகிச்சைப்பிரிவு, உயர் குருதிய முக்கம், சலரோகம், கண்பரிசோதனை அத் துடன் வருமுன்காப்பு கருத்தரங்குகளும், விழிப்புணர்வுக் கருத்துக்களும்நடைபெறவுள்ளது. அப்பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்றார்கள். (தீ)

## ஜப்பான்- சீனா உறவில் சிக்கல்

ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் புதிய சிக்கல் உருவாகியுள்ளது.

யசுகுனி நினைவிடத்திற்கு ஜப்பான் பிரதமர் கொய்சுமி சென்று அஞ்சலி செலுத்தி விட்டு வருவதை சீனா முற்றிலும் விரும்பவில்லை. இரண்டாவது உலகப்போரின் போது பலியானவர்களுக்கும் போர் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்பட்டு இறந்த 14 பேருக்கும் இது நினைவிடமாகும்.

ஜப்பான் பிரதமராக கடந்த 2001 ஆம் ஆண்டு பதவியேற்ற கொய்சுமி ஆண்டுதோறும் ஒரு முறை இந்த நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றார். இதற்கு சீனா கடும் அதிருப்தி தெரிவித்து வருகிறது.

மலேசிய தலை நகர் கோலாலம்பூரில் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் வருடாந்த உச்சிமாநாடு நடை பெறவுள்ளது.

அதற்கு முன்பாக சீனா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் சந்தித்து விவாதிக்கும் உச்சி மாநாடும் நடைபெறவிருந்தது. ஆனால் தற்போது இந்த உச்சி மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. யசுகுனி நினை விடத்திற்கு ஜப்பான் பிரதமர் கொய்சுமி சென்று அஞ்சலி செலுத்துவதை நாங்கள் விரும்ப வில்லை என்று சீன வெளியுறவுத் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மரணதண்டனைக்கு பயப்படவில்லை; சதாம்ஹுசைன் நீதிமன்றில் தெரிவிப்பு

(பாக்தாத்)

**ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம் ஹூசைனுக்கும் அவரது உயரதிகாரிகளுக்கும் எதிரான வழக்கு விசாரணையில் சாட்சிகள் பல அவருக்கு எதிராக வாக்குமூலம் அளித்த போதிலும் தான் மரண தண்டனைக்குப் பயப்படவில்லை என சதாம் ஹூசைன் நீதிமன்றில் தெரிவித்தார்.**



இந்த வழக்கு விசாரணை நேற்று இடம் பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதிவாதி தரப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு சட்டத்தரணிகளுக்குப் பதிலாக வெளிநாடுகளில் இருந்து இரண்டு புதிய சட்டத் தரணிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணையின்போது நீதிபதியின் நடவடிக்கைகளை சதாம் ஹூசைன் குறுக்கீடு செய்ததுடன் அரச வழக்கறிஞரையும் கேலி செய்துள்ளார்.

அவருக்கு எதிராக சாட்சியங்கள் தெரிவிக்கப்பட்டதும் அவரது முகம் ஆத்திரமடைந்தது. ஜூட்சே பகுதியைச் சேர்ந்த 148பேரை படுகொலை செய்தார்கள் என்று சதாம் ஹூசைனும் அவரது உயரதிகாரிகளும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

சியா மற்றும் குர்திஷ்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்தார் என்றும் சதாம் ஹூசைன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உயிருக்கு அபாயம் உள்ளதாகக் கூறி பெண்சாட்சி கண்ணீர் வடிப்பு

(பாக்தாத்)

சதாம் ஹூசைனின் வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த முதலாவது பெண்மணி தனது உயிருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி நீதிமன்றில் கண்ணீர் வடித்துள்ளார்.

சதாம் ஹூசைன் மீதான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றபோது சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு நடந்து கொண்டார்.

ஈராக்கிய சிறைச்சாலை காவலர்கள் தன்னைப் பலவந்தமாக உடைகளைக் களைய வைத்ததாக அவர் ஒரு திரைச்சேலையின் பின்னால் அமர்ந்த வண்ணம் தெரிவித்தார்.

அவரை இனம் காணாதவாறு கணினி மூலம் குரல் மாறுபாடடையச் செய்யப்பட்டது. ஆனால், ஓசை எழுப்பிய கருவி கோளாறுக்குட்பட்டதனால் அவர் பேசுவதை தம்மால் தெளிவாகக் கேட்க முடியவில்லை என்று சதாமின் சார்பிலான சட்டத் தரணிகள் குழு தெரிவித்ததையடுத்து சாட்சியமளிப்பதில் சிறிது நேரம் தடையேற்பட்டது.

## கொங்கோவின் கிழக்கில் பூகம்பம்; ஒருவர் பலி; பலர் காயம்

ஆபிரிக்காவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் கொங்கோவின் கிழக்குப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூகம்பத்தினால் ஒருவர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமுள்ளனர்.

கென்ய தலைநகர் நைரோபியில் இருந்து சுமார் 795 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கொங்கோவின் கிழக்குப்பகுதியைத் தாக்கிய இப் பூகம்பம் 6.8 ரிச்டர் அளவாக பதியப்பட்டிருப்பதாக அமெரிக்க புவிச் சரித திணைக்களம் தெரிவித்துள்ளது. இப் பூகம்பத்தினால் பல வீடுகள் இடிந்து விழுந்துள்ளதாகவும் வீடு இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாகவும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சி.ஐ.ஏ யினால் கைதிகள் கொடுமை; செய்திக்கு கொண்டலிசாரைஸ் மறுப்பு



(வோஷிங்டன்)

பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை ஐரோப்பிய நாடுகளில் உள்ள சி.ஐ.ஏ இரகசிய சிறைகளில் அமெரிக்க கொடுமைப்படுத்தியதாக வெளி வந்த செய்திகளை அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலிசாரைஸ் மறுத்துள்ளார்.

அதே சமயம் கைது செய்யப்பட்டவர்களை விசாரணைக்காக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு கொண்டு செல்வது சரிதான் என்றும் அவர் வாதிட்டுள்ளார்.

ஐரோப்பாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் முன்னர் வோஷிங்டனில் பேசுகையிலேயே அவர் இக் கருத்துக்களை வெளியிட்டார்.

அமெரிக்க தலைமை தாங்கி நடத்தும் பயங்கரவாதத்திற்கு கெதிரான போரில் கைது செய்யப்பட்டவர்களை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ தான் நடத்தும் இரகசிய சிறைகளில் அடைத்து வைத்துள்ளதாக வந்த தகவல்கள் பற்றி அமெரிக்காவின் விளக்கங்கள் குறித்து ஐரோப்பிய நாடுகள் கேள்விகளை எழுப்பலாம் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உளவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் சில நாடுகள் ஒத்துழைப்பு அளிப்பதாகத் தெரிவித்த ரைஸ் இந்த விடயம் இரு வழி தொடர்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## இரண்டாவது அணுமின் நிலையத்தை நிர்மாணிக்கப்போவதாக ஈரான் அறிவிப்பு

சர்ச்சைக்குரிய தனது அணுத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தங்களைச் சந்தித்துவந்த ஈரான் இரண்டாவது அணுமின் நிலையம் ஒன்றை நிர்மாணிக்கப்போவதாக அறிவித்துள்ளது.

தென்மேற்கு மாகாணத்தில் புதிய அணுமின் நிலையம் ஒன்றை அமைக்க அனுமதிக்கும் திட்டத்திற்கு அந்நாட்டு அமைச்சரவை அனு மதியளித்துள்ளது.

அடுத்த இருபது ஆண்டுகளில் இருபது அணுமின் நிலையங்களை அமைக்க தாம் விரும்புவதாக ஈரான் முன்பு தெரிவித்திருந்தது.

ஈரானின் அணுசக்தித் திட்டத்தில் மறைவு அற்ற தன்மை இல்லாதிருப்பது குறித்து சர்வதேச அணு ஆற்றல் கண்காணிப்பு நிறுவனமும் மேற்கத்திய நாடுகள் சிலவும் கவலை தெரிவித்துள்ளன.

செயற்பாட்டிலுள்ள அணுமின் நிலையம் எதுவும் ஈரானிடம் இல்லாத நிலையில் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் உற்பத்தி செய்கின்றது என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களை சமாளிப்பதற்காகவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## டாக்காவில் குண்டு வெடிப்பு; ஐந்து பேர் படுகாயம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புக்களில் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களை அண்டிய பகுதியிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது. கடைகளுக்கான பொருட்களில் இந்தக் குண்டுகள் வைக்கப்பட்டு அவற்றை அனுப்பும்போது வெடித்துள்ளன.

தடை செய்யப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதக் குழு இந்தக் குண்டு வெடிப்புக்களுக்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஈராக் தாக்குதல் தொடர்பாக தீவிரவாதிகள் வீடியோக்காட்சி

### அமெ. இராணுவம் மறுப்பு

ஈராக்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பான வீடியோக் காட்சியைத் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். இது போலியான வீடியோக் காட்சி என அமெரிக்க இராணுவம் மறுத்துள்ளது.

ஈராக்கில் உள்ள பலூஜா நகரில் கடந்த வெள்ளியன்று தீவிரவாதிகள் அமெரிக்கப் படையினர் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தி[illegible] [illegible]தியோரக் குண்டுகள் பயன்படுத்தப்பட[illegible] இதில் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த பத்துப் பேர் கொல்லப்பட்டனர். 11 பேர் படுகாயமடைந்தனர். ஈராக்கைச் சேர்ந்த இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாத அமைப்பு இந்த வெடிகுண்டுச் சம்பவம் குறித்து ஒரு வீடியோக் காட்சியை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அதில் அமெரிக்க இராணுவத்தினர் தங்கியிருக்கும் பகுதி போல் காட்சியளிக்கும் ஒரு பகுதி வழியாக ஒருவர் நடந்து செல்கிறார். சிறிது நேரத்தில் பயங்கர வெடிச் சத்தம் கேட்பதாக அவ் வீடியோக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

## ஈரானில் இராணுவ விமானம் வீழ்ந்து நொருங்கியது; 94 பேர் பலி

(தெகிரான்)

ஈரானின் தலைநகரான தெகிரானில் இராணுவப் போக்குவரத்து விமானம் வீழ்ந்து நொருங்கியதில் 94 பேர் பலியாகியுள்ளனர்.

பத்து மாடிக் கட்டடத்தின் மீது இந்த விமானம் வீழ்ந்துள்ளது. இதனால் கட்டடமும் இடிந்து நொருங்கியுள்ளது.

தெகிரானில் உள்ள பிரதான விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விமானத்தில் கோளாறு ஏற்பட்டதை அறிந்து கொண்ட விமானி விமானத்தைத் தரை இறக்குவதற்குள் இந்த விபத்து ஏற்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கு லெபனானில் மனிதப் புதைகுழி; 20 எலும்புக் கூடுகள் மீட்பு; தொடர்ந்தும் அகழ்வு

சிரிய எல்லைக்கருகில் உள்ள கிழக்கு லெபனான் அன்ஸார் நகரப் பகுதியில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலைப்பிராந்தியத்தில் அமைந்துள்ள இப் புதை குழியில் இருந்து இருபது எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இப் புதைகுழிக்கருகிலேயே சிரிய புலனாய்வுத்துறையின் முன்னைய தலைமையகம் இயங்கியது. அத்துடன் சிரிய இராணுவத்தால் நிர்வகிக்கப்பட்ட சிறைக்கூடமும் இருந்தது. இதில் லெபனான் தீவிரவாதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

ஒரு உடலில் இராணுவ சீருடை இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பெக்கா பள்ளத்தாக்கிலுள்ள இப் புதைகுழியைச் சூழவுள்ள பகுதிகளிலும், அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் பல எலும்புக் கூடுகள் மீட்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரியப் படைகள் லெபனானில் 29 வருடங்கள் இருந்துள்ளன. இக் கால கட்டத்தில் பெருந்தொகையான லெபனானியர் காணாமல் போயிருந்தனர். தற்போது கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் 12 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை கடந்த மாதமும் லெபனானின் பாதுகாப்பு அமைச்சுக்கருகில் பாரிய புதை குழியொன்று கண்டு பிடிக்கப்பட்டு அதிலி ருந்து 24 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் தற்கொலைத் தாக்கு; ஐந்து இஸ்ரேலியர்கள் பலி

இஸ்ரேலிய கரையோரப் பிரதேசமொன்றில் நேற்று முன்தினமிரவு பலஸ்தீன தற்கொலைப் போராளி ஒருவர் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஐந்து இஸ்ரேலியர்கள் பலியாகியுள்ளனர்.

வியாபார நகரமொன்றிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்திற்கு பலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

# தமிழீழ நீதித்துறையின் செயற்பாடுகள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் மகிழ்ச்சி

## -காவல்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்துப்பேச்சு

**ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எதேச்சையான சட்டத்திற்கு அப்பாற்பட்ட கொலைகளுக்கான விசேட தூதுவர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் தமிழீழ நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளரையும் காவல்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்து அவற்றின் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.**

இதன்போது உலகளாவிய ரீதியில் அரசியல் படுகொலைகள், பொலிஸ் பாதுகாப்பில் ஏற்படுகின்ற படுகொலைகள் பற்றி அவதானிப்புக்கள் மேற்கொண்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிக்கைகள் சமர்ப்பித்து வரும் அனுபவம் மிக்க அறிஞராகிய பிலிப்ஸ் அலஸ்டன் தமிழீழத்தில் உருவாக்கப்பட்டுள்ள குற்றவியல், குடியியல், முறைமன்றங்கள் மேன்முறைமன்றங்கள் மற்றும் மேன்முறையீட்டு மன்று, சிறப்புமுறைமன்று ஆகியவற்றின் நடபடிமுறைகள் அமர்வுகளில் பங்கெடுக்கும் முறையாளர் எண்ணிக்கைகள் கையாண்ட வழக்குகள் தொகை என்பன பற்றி கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் அவர்கள் இராணுவ முறை மன்றத்திற்கும் சாதாரண மன்றுக்குமிடையிலான வேறுபாடுகளையும் போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான பிணக்குகள் சாதாரண மன்றினால் விளங்கப்படுவது தொடர்பான விளக்கங்களையும், கேட்டறிந்து கொண்டனர்.

தொடர்ந்து அவர்கள் குற்ற ஒப்புதலின் இயல்பு, தன்மைகள் பற்றியும், அவை தொடர்பாக தமிழீழ சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடு பற்றியும் கேட்டறிந்தனர்.

இறுதியாக தமிழீழத்தில் வெளிவந்த சட்டங்கள் பற்றியும், அவைகள் உருவாக்கப்படுகின்ற வழிகள் பற்றியும். கேட்டறிந்து கொண்டு நீதித்துறையின் செயற்பாடு பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்.

முன்னதாக வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய இவர்கள், தமிழீழகாவல்துறை பற்றிய முறைப்பாடுகள் மனித உரிமைச் செயலகத்திற்குகிடைக்கப் பெற்றுள்ளனவா என்பதையும் தற்போது வடக்கு கிழக்கில் நடைபெற்றுவரும் கொலைகளுக்கு மனித உரிமை செயலகம் எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்தனர். பின்னர் தொடர்ந்து இக்குழுவினர் தமிழீழகாவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களை சந்தித்துக் கலந்துரையாடினர். (ச)



---

- ஜேசு சபையின் உதவியுடன் -

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவருக்கு படகுகள், வலைகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஒரு தொகுதி படகுகளும் வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தில். வைத்து நேற்று இவை வழங்கப்பட்டுள்ளன.

ஜேசுசபைஅகதிகள் பணி (ஜே.ஆர் எஸ்) நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் இந்தப் படகுகளும் வலைகளும் வழங்கப்பட்டன. இவ் வைபவத்திற்கு ஜே.ஆர்.எஸ். நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் அமலன் தலைமை தாங்கினார்.

# திருத்தந்தையின் பிரதிநிதி முல்லைத்தீவுக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் திருத்தந்தை பாப்பரசரின் பிரதிநிதி மாண்புமிகு மாரியோ செனாரே முல்லைத்தீவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது சுனாமியினால் அழிவுற்ற இடங்களைப் பார்வையிட்டு புனித இராயப்பர் ஆலயத்திற்குச் சென்று ஆசீர்வாதம் செய்தார். தொடர்ந்து தற்காலிகமாக உண்ணாப்புலவில் அமைந்துள்ள புனித இராயப்பர் ஆலயத்தில் அருட்தந்தை எம். கருணாரட்ணம் அடிகளார் நடத்திய நற்கருணை வழிபாட்டில் கலந்து கொண்ட அவர் மக்களுக்கு கருணைமிகு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் கருத்துரை நிகழ்த்தினார். இந் நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (20)

# காணி அலுவலக நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செய லக காணி அலுவலகத்தினால் நட மாடும் சேவைகள் மூலம் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் ஒன்பதாம் திகதியன்று உதயநகர் கிழக்கு கிராம மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களுக்கு கையொப்பமிடும் நடவடிக்கைகள் உதயநகர் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்தும்,அன்றைய தினம் கோணாவில் கிராமமக்களின் காணி சம்பந்தமான விசாரணைகள் கோணாவில் பொது மண்டபத்தில் வைத்தும் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ளதெனவும் எதிர்வரும் 12 ஆம் திகதியன்று அம்பாள்குளம் கிராம மக்களுக்கான காணிக்கச்சேரி கரைச்சிப்பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள தென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

# வவுனியாவில் கவிஞர் நாவண்ணனின் "அக்கினிக் கரங்கள்" நூல் வெளியீடு

(வவுனியா செய்தியாளர்)

கவிஞர் நாவண்ணனின் "அக்கினிக் கரங்கள்" நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வரவேற்புரையை சுயாதீன ஊடகவியலாளர் கனகரவி நிகழ்த்த, ஆசியுரையை வவுனியா இந்து மாமன்றத் தலைவர் சிவநெறிப் புரவலர் சி.ஏ. இராமசுவாமி நிகழ்த்தினார். இந்திய அமைதிப் படையின் அக்கிரமங்களை வெளிப்படுத்தும் இந்நூலின் வெளியீட்டுரையை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நிகழ்த்தினார். அருட்சகோதரி லக்சுமி நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை பொறியிலாளர் க. சிவானந்தராஜா பெற்றுக்கொண்டார். ஆய்வுரையை தமிழருவி சிவகுமாரன் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் நாவண்ணன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கம், இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (10)

# மாதாந்த உதவிப்பண கொடுப்பனவை 10ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்க

மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு டிசம்பர் 10 ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு 01-14 ஆம் திகதி வரை விசுவமடு கிழக்கு, மேற்கு.மாணிக்கபுரம், இளங்கோபுரம், வள்ளுவர்புரம் ஆகிய கிராம அலுவலர் பகுதிக்கும், 15-30 ஆம் திகதி வரைக்கும் தட்டுவன் கொட்டி, புன்னை நீராவி. பிரமந்தனாறு கிராம அலுவலர் பகுதிக்கும் வழங்கப்பட்டு வந்தது. இறுதியாண்டு கணக்கெடுப்பிற்கு வசதியாக 01-10 ஆம் திகதி வரை மேற்படி கிராம அலுவலர்கள் பகுதிகளுக்கும் கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே பயனாளிகள் குறித்த திகதிகளில் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு விசுவமடு தபாலதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (46)



கிளிநொச்சி திருநெறிக்கழகத்தினரால் அண்மையில் நடாத்தப் பெற்ற தரம் 11 இற்கான சைவநெறிப்போட்டியில் திறமைச்சித்தி எய்தி தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட திருவையாறு மகாவித்தியாலய மாணவி செல்வி இ.றஜனி திருநெறிக்கழக நிர்வாகஉறுப்பினர்களுடனும் திருவையாறு மகாவித்தியாலய ஆசிரியர்களுட னும்நிற்பதனைப்படத்தில் காணலாம்.

(படம்-சோதி)

# தேசிய இளைஞர் சேவை மன்ற அங்குரார்ப்பண நிகழ்வு

திருமுறிகண்டி பிரதேச தேசிய இளைஞர் சேவைமன்ற அங்குரார்ப்பண நிகழ்வு திருமுறிகண்டி ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

செ.தனஞ்சியன் தலைமையில் நடைபெற்ற மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வில் இவ்வமைப்பின் தலைவராக ச.கிருபாகரன், செயலாளராக மு.பன்னீர்ச்செல்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றனர். மேற்படி திருமுறிகண்டி பிரதேச இளைஞர் சேவைமன்றமானது அப்பகுதி மக்களுக்கான சேவையையும கிராம அபிவிருத் தியையும் இலக்காக கொண்டு செயற் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வவுனியா மாவட்டத்தில் விசேட தேவைக்குட்பட்டோர் தின விழா

(வவுனியா செய்தியாளர்.)

வவுனியா மாவட்ட விசேட தேவைக்குட்பட்டோர் தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலையின் உள்ளக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வவுனியா வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி சாள்ஸ்,வவுனியா வடக்கு கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன். வவுனியா பதில் சுகாதாரசேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.மகேந்திரன், வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் க.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின் இறுதியில் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் சமூகம்சார் புனர்வாழ்வுத்திட்டத்தில் உள்ள மாணவர்களினதும், புதுவாழ்வு பூங்கா மாணவர்களினதும், சீட் நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற வலுவூட்டல் வளாக மாணவர்களினதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசேட தேவைக்குட்பட்டோரினால் ஆக்கப்பெற்ற பொருட்களின் கண்காட்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

–கற்கை நடவடிக்கைகளுக்கு இடையூறாகவுள்ள–

# படையினரின் செயற்பாடுகளை தடுக்கவிடுக்கப்பட்ட கோரிக்கைக்கு கண்காணிப்புக் குழு கைவிரிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டு மாணவர்களது சுதந்திரமான கற்றல் நடவடிக்கைகளுக்கு இடையூறாக இராணுவம் மேற்கொண்டு வரும் யுத்தநிறுத்த மீறல்களைத் தடுத்து நிறுத்தக் கோரியபோதும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தம்மால் ஒன்றுமே செய்யமுடியாது எனக் கைவிரித்து விட்டனர் என தமிழ்-மாணவர் ஒன்றியத்தலைவர் ப.குணேந்திரன் விசனம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மேலும் தெரிவித்த தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரன், யாழ்.மாவட்ட மாணவர்களது கல்வியை மட்டு மன்றி தமிழ் மாணவர்களது கல்வி முன்னேற்றத்தையே முடக்கும் வகையில் இனவாத அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

இதன் ஓர் அம்சமாகவே பாடசாலைகளுள் இராணுவ அரண்களை அமைப்பதும்-மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் பாடசாலைச் சூழல்களில் முகாம்களையும், காவலரண்களையும் அமைக்கும் நடவடிக்கைகளில் இராணுவம் அரசின் தூண்டுதலுடன் செயற்படுகிறது. மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படுவதற்கு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு ஆவன செய்யவேண்டும்என்று நாம்கோரினோம். ஆனால் அவர்கள் இது விடயத்தில் தம்மால் எதுவும் செய்யமுடியாது என்று கை விரித்துள்ளனர். இதன் மூலம் மாணவர்களாகிய நாம் போராட்டங்களை நடத்தியே எமது கல்வி உரிமைகளையும், வாழ்வுரிமைகளையும் பெற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றார். (33)

## குடாநாட்டு நிலைமையை சமாளிக்க விசேட கொமாண்டோ அணி பலாலி வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு விசேட இராணுவ அணி ஒன்று வரவழைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட கொமாண்டோ பயிற்சி பெற்ற 2000 படையினர் நேற்று முன்தினம் விமானம் மூலம் பலாலி வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இராணுவத் தினர் மீதான இனந்தெரியாதோரின் தாக்குதல்களால் இழப்புக்களை சந்தித்துவரும் நிலையில் இதனை தடுத்து நிறுத்தும் முகமாகவே மேற்படி படையினர் வரவழைப் பட்டுள்ளதாக பலாலி இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (33)

## வீதியோர மரங்களை அழிக்கும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டின் பிரதான வீதிகளின் இரு மருங்கிலுமுள்ள மரங்கள், பற்றைகளை மக்களைக் கொண்டு படையினர் அகற்றி வருகின்றனர்.

குறிப்பாக பலாலி- பருத்தித்துறை வீதி காங்கேசன்துறை கண்டிவீதியின் இரு மருங்கிலுமுள்ள மரங்களின் கிளைகள் முற்றாக தறிக்கப்பட்டு வருகிறது.

இதற்கு மக்கள் வற்புறுத்தப்பட்டு வருவதுடன் படையினர் நேரில் நின்று வலுக்கட்டாயமாக மக்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

இதனால் மக்கள் பெரும் நெருக்கடியையும் அசௌகரியங்களையும் சந்தித்துள்ளனர். (33)

## தலைக்கவசம் அணிய படையினர் தடை விதிப்பு

(யாழப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தலைக் கவசம் அணிந்து உந்துருளி செலுத்துவதற்கு படையினர் தடை விதித்துள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் குண்டுத்தாக்குதல்கள் உந்துருளிகளில் வருவோராலேயே நடாத்தப்படுவதாகவும் இதனால் பீதியடைந்துள்ள இராணுவத்தினர் தலைக்கவசம் அணிந்து வருவதால் இனங்காணமுடியாத நிலை உள்ளதாக காரணம் காட்டி மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

இந்தநிலையில் சிறிலங்கா பொலிசார் தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கிளில் பயணிப்போரை தடுத்து பணம் அறவிட்டு வருகின்றனர்.

இதனால் உந்துருளியில் பயணிப்போர் பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளனர். (33)

## ஹாட்லிக் கல்லூரி காவலரணுக்கு அருகாமையிலுள்ள மக்கள் இடம் பெயர்வு

(நல்லூர்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி காவலரண்களுக்கு அருகாமையில் இருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளார்கள்.

ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க இராணுவம் மற்றும் பொலிசார் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட கண்ணீர்ப்புகைக்குண்டுகளை மக்கள் குடியிருப்புக்களுள் அடித்தமையால் இத்தகைய இடம் பெயர்வுகளுக்கு மக்கள் உள்ளாகியுள்ளார்கள்.

இராணுவம் தொடர்ந்து காவலரண்களை அமைப்பதை நிறுத்தும் வரை மாணவர்களின் போராட்டம் தொடர்ந்தமையும் குறிப்பிடத்தக்க தாகும். (41)

## இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரிப்பு குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரது நடமாட்டம் அதிகரித்து இருப்பதால் பொதுமக்கள் பெரும் குழப்பமடைந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக இராணுவக் காவலரண்கள், இராணுவ வாகனங்கள் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டுவந்த கைக்குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக அச்சமடைந்துள்ள இராணுவத்தினர் வீதிகளில் அதிகமாக நடமாடி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்படையச் செய்துள்ளனர்.

இதேவேளை, இராணுவத்தினர் இராணுவ வாகனங்களுக்கு நெற் அமைத்திருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக பலாலி வீதியில் இராணுவத்தினர் நடமாட்டம் அதிகமாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (கீ)

## மட்டு. மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பலாலி ஆசிரிய கலாசாலை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மட்டக்களப்பு தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் கடந்த ஞாயிறன்று ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவீரர்தினத்திற்கான அலங்கார வளைவுகள், கொடிகள், நினைவுப்பந்தல்கள் என்பன இராணுவபுலனாய்வு பிரிவினாலும் தமிழ் தேச விரோதிகளாலும் சேதப்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் காலவரையறையின்றி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு தகுந்த பதில் அளிக்கும் வரை தாம் தொடர்ந்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.(கீ)

## சர்வதேச வலுவிழந்தோர் தினம் நல்லூர் பிரதேசத்தில் அனுஷ்டிப்பு

தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்புப் பொருத்தும் தொழில் நுட்ப நிறுவனத்தினால் சர்வதேச வலுவிழந்தோர் தினம் கொண்டாடப்பட்டது.

வெண்புறா நிறுவனத்தின் தலைவர் வி.ரி.சிவலிங்கம் தலைமையில் வெண்புறா நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச செயலாளர் ஜி. மோகன் கிராம அலுவலர் க.விஜயரட்ணம், வெண்புறா நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் சி.லோறன்ஸ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வலுவிழந்தவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டு வெண்புறா நிறுவனத்தினால் கௌரவிக்கப்பட்டார்கள். (41)

## மக்களின் முறைப்பாடுகளை ஏற்க மறுக்கும் பொலிசார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களின் முறைப்பாடுகளை பொலிசார் ஏற்க மறுத்து வருகின்றனர்.

அண்மை நாட்களாக இடம்பெற்று வரும் தாக்குதல்களால் மக்கள் மீது ஆத்திரம் கொண்டுள்ள பொலிசார் மேற்படி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மக்கள் யாரிடம் முறைப்பாடு செய்வது என்று திண்டாடி வருகின்றனர். (33)

## ஒன்பது இலட்சம் ரூபா செலவில் பொதுநோக்குமண்டபம்

(நல்லூர்)

கோண்டாவில் வடகிழக்கு கிராம அலுவலர்(ஜே 119) பிரிவில் வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் கீழ் ஒன்பது இலட்சம் ரூபா செலவில் பொது மண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கோண்டாவில் வடகிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.அருணாசலம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் அத்திவாரக்கல்லை நாட்டி வைத்துள்ளார்.

இப் பொது மண்டபத்தில் கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அலுவலகங்கள் அமைக்கப்படுவதுடன் பொது நிகழ்வுகளுக்கான மண்டபமும் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் கீழ் விவசாயக் கிராமங்களை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப் பொது மண்டபம் அமைக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதில் அப் பகுதி பொதுமக்களின் உதவி மூலம் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா முதலிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## நிகொட் திட்டத்தின் நிதியுதவியுடன் பொதுநோக்கு மண்டபத்துக்கான அடிக்கல்நாட்டல்

(மல்லாவி)

முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகுட்பட்ட யோகபுரம் மத்தி கிராமத்தில் நிகொட் திட்டத்தின் ஏழரை இலட்சம் ரூபா நிதியுதவியுடன் கிராம அபிவிருத்திசங்கத்தின் அனுசரணையுடன்பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 03.12.2005 மு.ப. பதினொரு மணிக்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் த.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முதன்மையாக அடிக்கல்லினை துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார் நாட்டி வைத்தார். தொடர்ந்து மறு கல்லினை துணுக்காய் பிரதேச சபை செயலாளர் மு.கி நவரெட்ணராஜா, மல்லாவி மத்திய கல்லூரி திருமதி பு.பாலசுப்பிரமணியம் மல்லாவி வர்த்தகரான முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை சோதி ஆகியோர் நாட்டி வைத்தனர். இந் நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பிரான்ஸ் நாட்டு மருத்துவக் குழுவை சேர்ந்த பொறியியலாளர் செபஸ்ரி ஆகியோருடன் மாதர்சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். (24)



(படம்-அன்ரனி)

# சிறிலங்காவின் அழைப்பு இந்தியாவால் நிராகரிப்பு?



**சிறிலங்காவின்** அண்மைய ஆட்சியாளர்கள் அதிகாரத்திற்கு வந்ததும் முதலில் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்வதை மரபாக்கிக் கொண்டு விட்டனர். இந்தவகையில் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்றதைத் தொடர்ந்து அவரின் வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர தனது கன்னிப்பயணத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டு திரும்பியுள்ளார். அதேபோன்று இம்மாதத்தில் சனாதிபதி மகிந்தராஜபக்ஷவும் தனது கன்னிப்பயணத்தை இந்தியாவிற்கே மேற்கொள்வார்.

வெளிவிவகார அமைச்சரின் கன்னிப் பயணமானது இந்திய ஆட்சியாளர்களுடனான அறிமுகத்திற்காக இருப்பினும் தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் இனப்பிரச்சினைத் தீர்விற்குக் குறுகியதொரு கால அவகாசத்தை அறிவித்துள்ள நிலையில் மிகவும் அரசியல் முக்கியத்துவம் மிக்கதொன்றாக கணிக்கப்பட்டது.

அதாவது மங்கள சமரவீரவின் இந்தியாவிற்கான விஜயமானது இனப்பிரச்சினை விடயத்தில் மகிந்தராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட முதல் நடவடிக்கையாகவும் கொள்ளத்தக்கதாகும்.

மகிந்தராஜபக்ஷ அரசாங்கம் தனது தேர்தல் பரப்புரையில் இனப்பிரச்சினை தொடர்பான இரண்டு விடயங்களை முதன்நிலைப்படுத்தியுள்ளது.

1) இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு.

2) நோர்வே அரசு மத்தியஸ்துவ பணியில் இருந்து நீக்கப்படும்/ வெளியேற்றப்படும் என்பதாகும்.

இவற்றில் முதற் கட்டமாக நோர்வேயை வெளியேற்றி இந்தியாவை ஏற்பாட்டாளர் நிலைக்குக் கொண்டுவருவதே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொண்ட முதல் நகர்வாக இருந்தது. இதற்கு மங்களசமரவீரவின் இந்தியா விற்கான பயணத்தின் மூலம் பிள்ளையார் சுழி போடுவதற்கு மகிந்தராஜபக்ஷ முயற்சித்தார்.

இதேவேளை இந்திய அரசாங்கமும் கடந்த ஒரு தசாப்தகாலத்திற்கு மேலாக கடைப்பிடித்த அணுகுமுறையில் இருந்து சற்று மாறுபட்ட வகையில் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கையைக் கடைப்பிடிக்கத் தயாராக இருப்பதாக சில ஆரூடங்களும், சமிக்ஞைகளும் வெளிப்படவே செய்தன. அதாவது முற்றிலுமாக ஒதுங்கியிருக்கும் நிலையில் இருந்து சற்று மாறுபட்டு இனப்பிரச்சினை தொடர்பான சில நகர்வுகளை இந்தியா மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த வகையில் சிறிலங்காவில் ஆட்சி மாற்றமும், இந்தியாவின் மனமாற்றமும் இணைந்து இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையீடுகளை மேற்கொள்ளலாம் என ஆரூடம் கூறப்பட்டது. இது பொதுவில் தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான அழுத்தங்களை பிரயோகிப்பதற்காகவும் இருக்கும் எனவும் பரவலான அபிப்பிராயம் இருந்தது.

இந்நிலையில் மங்களசமரவீரவின் இந்திய விஜயமானது இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீட்டிற்கான அழைப்பிற்கானதாகவும் இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்பட்டது. ஆகையினால் இந்தியாவின் நிலைப்பாடு அரசியல் வட்டாரங்களில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதொன்றாக இருந்தது.

ஆயினும், இந்தியாவின் நிலைப்பாடானது சிறிலங்கா அரசின் எதிர்பார்க்கைக்கும் ஏற்ற விதத்தில் அமைந்திருக்கவில்லை என்பதையே தற்பொழுது வெளியாகும் தகவல்கள் ஊர்ஜிதம் செய்வதாகவுள்ளன. அதாவது தற்போதைய சூழ்நிலை தனது பிரவேசத்திற்கு ஏற்றதாக இல்லை என இந்தியா கருதுவதுபோன்று தெரிகின்றது. அவ்வாறு இந்தியா கருதுவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட காரணிகள் சுட்டிக்காட்டத் தக்கதாய் உள்ளன.

இவற்றில் முக்கியமானவையாக,

1) மகிந்தராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு என்ற நிலைப்பாடு.

2) நோர்வேயை மத்தியஸ்துவ முயற்சியில் இருந்து வெளியேற்றுதல்.

3) சிறிலங்கா அரசியல் வாதிகளின் குணநலன் என்பன கொள்ளத்தக்கன.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டிமுறையிலான அரசியல் தீர்வு என்பதே ஏற்கனவே இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாக இருந்தது. இந்தியாவைப்பொறுத்து ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு என்பது முன்னைய வாஜ்பாய் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டின் மூலம் எடுத்த தீர்மானத்தையே தற்போதைய அரசாங்கமும் பின்பற்றப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையில் சிறிலங்காவின் புதிய அரசாங்கம் சமஷ்டிமுறையிலான தீர்வையே நிராகரிக்கையில் எவ்வாறு இந்தியாவினால் இனப்பிரச்சினை விடயத்தில் பங்காற்றமுடியும். ஏற்கனவே இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா நிதானித்துச் செயற்பட வேண்டும் எனவும் சிறிலங்கா அரசாங்கத்தின் கோரிக்கைகளைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும் தமிழகத்தில் இருந்து அபிப்பிராயங்கள் வெளிப்படத்தொடங்கியிருந்தன.

இந்நிலையில் மத்தியில் கூட்டணி அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்திவரும் பிரதமர் மன்மோகன்சிங் அரசாங்கம் இலங்கை இனப்பிரச்சினையின் சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஆதரவானதொரு தீர்மானத்துடன் பங்காற்றுதல் என்பது சாத்தியப்பாடானதல்ல.

ஏனெனில் அத்தகையதொரு நிலைப்பாட்டுடன் பங்காற்றுதல் என்பது தமிழ்மக்களுக்கு விரோதமாக இந்தியா செயற்படுவதாகவே அர்த்தப்படும். இது இலங்கைத்தமிழ் மக்களினாலோ, தமிழக மக்களினாலோ ஏற்றுச் கொள்ளத்தக்கதாக இருக்கமாட்டாது. அத்தோடு இது இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் நடு நிலைமையுடன் பங்காற்றுவதற்கும் ஏற்புடையதாக மாட்டாது.

அடுத்ததாக நோர்வே மத்தியஸ்துவத்தை நிராகரிக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் முயற்சிகளுடன் ஒத்துப்போதல் என்பதும் இன்றைய சர்வதேச அரசியல் ஒழுங்கில் சாத்தியமாக இல்லை. நோர்வேயின் மத்தியஸ்துவம் என்பது தனியாக அவ்அரசின் நிலைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தொன்றல்ல. மேற்கு நாடுகள் குறிப்பாக இனப்பிரச்சினை விடயத்தில் இணைத் தலைமை வகிக்கும் அமெரிக்கா, யாப்பான், ஐரோப்பிய ஒன்றியம், என்பவற்றின் நிலைப்பாட்டுடனும் தொடர்புபட்டதாகும். ஆகையினால் நோர்வேயின் மத்தியஸ்துவத்திற்கு எதிரானதாக இந்தியா செயற்படுமேயானால் மேற்குலக நாடுகளின் குறிப்பாக புதிய சர்வதேச ஒழுங்கு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் மேற்குலக நடவடிக்கைக்கு எதிரானதாக அது அமையக் கூடும்.

ஆனால் இன்று அத்தகையதொரு நிலைப்பாட்டுடன் செயற்படும் நிலையில் இந்திய அரசு இல்லை. ஏனெனில் இன்றைய புதிய சர்வதேச ஒழுங்கு அதாவது உலகமயமாதல் என்பதனை அடிப்படையாகக் கொண்ட புதிய ஒழுங்கினை அடியொற்றியதாகவே இந்தியாவும் தனது வெளியுறவுக்கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளது.

ஆகையினால் கெடுபிடிக்காலத்தைப் போன்று தலைமைத்துவப் போட்டியிலோ அன்றி பிராந்திய வல்லரசு என்ற வல்லாதிக்கப் போட்டியிலோ வெளிப்படையாக ஈடுபட இந்தியா தயாராக இல்லை. மேற்குலகத்தின் உலகமயமாதல் கோட்பாட்டிற்குள் எவ்வாறு அனுசரித்தபோக்கு ஒன்றைக் கைக்கொள்ள இந்தியா தற்பொழுது தயாராகவுள்ளதோ அதேபோன்று இனப்பிரச்சினை விடயத்திலும் இணைத்தலைமையுடனான நிலைப்பாட்டுடன் அனுசரித்ததொருபோக்கையே இந்தியா வெளிப்படுத்த முற்படுவதாகத் தெரிகின்றது.

அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லாத பட்சத்தில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மத்தியஸ்துவம் தொடர்பான அழைப்பினை விட டில்லி வந்துள்ள சமயத்தில் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும் இனப்பிரச்சினை விடயத்தில் விசேடதூதுவராகப் பணியாற்றிய வருமான எரிக்சூல்ஹெய்ம் அவர்களை இந்தியா வரவேற்றிருந்தமை இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்ததெனில் மிகையாகாது.

அத்தோடு இதனை உறுதிப்படுத்துமாப் போன்றே இந்தியாவின் அறிவிப்பும் உள்ளது. அதாவது டில்லியில் எரிக்சூல்ஹெய்முடனான சந்திப்பின் பின்னர் கருத்துவெளியிட்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம்சரண் இலங்கையில் நடைமுறையிலுள்ள போர் நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளதோடு இலங்கையின் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க நோர்வேயுடன் இணைந்து இந்தியாவும் உதவிசெய்யும் எனத் தெரிவித்தார்.

அடுத்ததாக சிறிலங்கா அரசியல் தலைமைகள் மீது எத்தகைய நம்பிக்கை கொண்டு செயற்படுவது என்பதும் இந்தியாவைப் பொறுத்து பெரிதும் கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது. ஏனெனில் கடந்தகால அனுபவமும் தற்பொழுது நோர்வே போன்ற நாடுகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள அனுபவமும், இந்தியாவை இவ்விடயத்தில் வெகுவாகச் சிந்திக்க வைப்பதாகவே கருதலாம்.

எடுத்துக்காட்டாக இந்திய-சிறிலங்கா உடன்பாட்டின்படி இலங்கை வந்த இந்திய இராணுவத்தை ஒரு கட்டத்தில் சிறிலங்கா அரசுத் தலைவரே ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கூறியிருந்ததை இந்திய ஆட்சியாளர்களும், வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்களும் இலகுவில் மறந்துவிடமுடியாது. அதாவது இந்தியா அழைக்கப்பட்டவர்களாலேயே அவமானப்படுத்தப்பட்டிருந்தது.

இதை ஒத்தநிலையே நோர்வே அரசிற்கும் நடந்தது. முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினாலேயே நோர்வே அழைக்கப்பட்டிருந்ததாயினும் அவராலேயே நோர்வே புறக்கணிக்கப்பட்டதும், அவரது பிரதமரால் அவமானப்படுத்தப்பட்டதும் கூட நடந்ததுண்டு.

இதைத்தவிர ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற பேரினவாதசக்திகளினாலும் அவமானப்படுத்தப்பட்டதுண்டு. அதாவது நோர்வேயின் தேசியக்கொடி எரிக்கப்பட்டதும் "பச்சை மீன் தின்னிகள்" என நோர்வே இழைப்பட்டதும் உண்டு. அத்தோடு சமாதான ஏற்பாட்டாளர்களாக வந்த அவர்களை வெள்ளைப்புலிகள் எனக்குற்றமும் சாட்டினர்.

அதுமட்டுமன்றி சிங்கள அரசியல்வாதிகள் குறிப்பாக இன்று ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு ஆதரவாகவுள்ள ஜே.வி.பி போன்ற சக்திகள் தொடர்பாகவும் இந்தியா அதிருப்தி கொள்ள வாய்ப்புண்டு. ஏனெனில் இந்திய இராணுவம் 1987இல் சமாதான உடன்பாட்டின் அடிப்படையில் இலங்கை வந்த போதும் கூட அவர்களை ஆக்கிரமிப்பாளர்கள் எனக் குற்றம்சாட்டியதோடு இந்தியப்பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு சிங்களவரை வற்புறுத்தினர். இந்தியப்பொருட்களை வியாபாரம் செய்த வியாபாரிகளைக்கூட ஜே.வி.பி யினர் படுகொலை செய்ததுண்டு.

இந்தவகையில் சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி நம்பிக்கைக்குரியவர்களாகவோ, நன்றி விசுவாசத்துடன் செயற்படக்கூடியவர்களாகவோ இருப்பதில்லை. இந்நிலையில் இந்திய அரசாங்கம் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுதல் என்பது குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது.

ஆனால் இந்தியாவின் தற்போதைய அணுகுமுறை சிறிலங்காவின் புதிய ஆட்சியாளர்களுக்கு சற்று ஏமாற்றம் அளிப்பதாகவே இருந்திருக்கும். அது மட்டுமல்ல இந்நகர்வு சந்தித்துள்ள பின்னடைவால் சிறிலங்கா அரசு சில நெருக்கடிகளுக்குள் முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்குக் கூட உள்ளாகியுள்ளதெனலாம்.

அதாவது ஒரு புறத்தில் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் கால அவகாசமும், இந்தியா நோக்கிய முதல் நகர்வும் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காத நிலையில் உடனடியாகப் புதிய நகர்வு தேவையாகவுள்ளது. ஆனால் மறுவளமாக உள்நாட்டில் ஆட்சியாளர்களுக்கு உள்ள முட்டுக்கட்டைகள்-அதாவது அரசியல் கூட்டணியில் உள்ள முரண்பாடுகள் நகர்வுகளுக்கு இடம் கொடுக்க முடியாத நெருக்கடிகளைத் தோற்றிவிப்பதாகவுள்ளது எனின் தவறாகாது.

ஜெயராஜ்




## 28-11-2005-04-12-2005

**28**


திருகோணமலை பனிக்கியா என்ற இடத்தில் இராணுவக் காவலரண் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சிறிலங்காப் பொலிசாரையும் டிசம்பர் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றம் உத்தரவு.

சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சனதிபதி செயலகத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

**29**

ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிக்கான விசேட தூதுவரும் முன்னாள் அமெரிக்க சனாதிபதியுமான பில் கிளிங்டனை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி கொழும்பில் சந்தித்து, வடக்கு-கிழக்கு பகுதிகளில் மூன்றாம் கட்ட சுனாமி மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நிலவும் மந்தநிலை குறித்து உரையாடியுள்ளார்.




கொழும்பு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமி மீளமைப்புக் கான விசேட தூதுவர் பில்கிளிங்டன் சனதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமான கொழும்பு துறைமுகப் பகுதியில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனக் கூறி ஆறு சிங்களவர்கள் துறைமுகப் பொலிசாரால் கைது.

**30**

சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதலாவது தேசிய பாதுகாப்புச் சபைக்கூட்டம் சனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றது.

இந்திய தென்பிராந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பி.எஸ். தக்கார் சிறிலங்கா வருகை.



அரசின் வன்முறைகளுக்கு எதிராக கிழக்குப் பல்கலைக்கழகமாணவர்கள் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

ஓவியர் புகழேந்தியின் "புயலின் நிறங்கள்" எனும் ஈழப்போர் வரலாற்றுப் பதிவு ஓவிய நூல் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக



கைலாசபதி அரங்கில் இடம் பெற்றது.

**01**

யாழ் நீர்வேலிப்பகுதியில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினரால் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை.

தமிழர் தாயகத்தல் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொலண்ட் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேசிய போது எடுத்துரைப்பு



இந்தியாவின் தென்பகுதி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்-தக்கார் வவுனியாவில் சிறிலங்கா இராணுவ முன்னரங்க காவல் நிலைகளுக்குச் சென்று பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டார்.

நடைமுறையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்ய வேண்டுமானால் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்து கலந்துரையாடியபின் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு தெரிவிப்பு.

**02**

யாழ். நீர்வேலியில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் இரு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்த அழைப்பினை ஏற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு. யாழ். குடாநாடு முற்றாக ஸ்தம்பிதம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் முன்னால் கூடிய இராணுவத்தினரை மாணவர்களும் இளைஞர்களும் அந்த இடத்திலிருந்து விரட்டியடிப்பு.

யாழ். குடாநாட்டில் பரவலாக சிறிலங்கா படையினர் மீதான தாக்குதல்கள் இடம் பெற்றதில் ஐந்து படையினர் காயம்.

நாவற்குழியில் சிறிலங்காப் படையினரின் விநியோக வாகனஅணி அப்பகுதி இளைஞர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. எதிர்ப்பினை சமாளிக்க முடியாது படையினர் திரும்பினர்.

மீசாலையில் இராணுவத்தினரின் கண் மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தால் இளைஞர் ஒருவர் படுகாயம்.

திருகோணமலை அநுராதபுரச் சந்தியில் சிங்களவணிகர்ஒருவர் இனந்தெரியா தோரால் சுட்டுக்கொலை.

காத்தான்குடி பிரதேச செயலர் ஏ.எல். எம். பளீல் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு.


**03**

தமிழர் தாயகத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கம் முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலம் மனித உரிமை மீறல்களை முடிவிற்கு கொண்டுவரமுடியும் இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சர்வதேச மன்னிப்பு சபையின் பணிப்பாளர் ஐரேனி சுபைடாகானை சந்தித்துப் பேசியபோது தெரிவிப்பு.

யாழ். நகரப் பகுதியில் இராணுவத்தினர் மீது இருவேறு கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப் பட்டதையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் படுகாயம்.

நீர்வேலியில் சிறிலங்கா இராணுவ புலனாய்வு பிரிவினரால் இரு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இரண்டாவது நாளாகவும் பூரணஹர்த்தால் அனுஷ்டிப்பு.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச மன்னிப்புசபையின் பணிப்பாளர், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனைச் சந்தித்து கலந்துரையாடினார்.



வடமராட்சியின் மாலுசந்திப் பகுதியிலுள்ள சிறிலங்கா ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்திற்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த படையினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் மூன்று படையினர் படுகாயம்.

**04**

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 11 சிறிலங்கா இராணுவத்தின் கொல்லப்பட்டன் பலர் காயம்.

யாழ்ப்பாணத்தில் நீர்வேலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் கோண்டாவில் பகுதிகளிலும் படையினரின் கெடுபிடி அதிகரித்தையடுத்து அப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பில் சனதிபதி மகிந்தவுக்கும் முப்படைத் தளபதிகளுக்கு மிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

கோண்டாவில் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொதுமக்கள் காயம்.

யாழ். நகரப் பகுதியில் அடையாள அட்டையின்றி நடமாடிய பலர் இராணுவத் தினரால் கைது.

வடமராட்சி மாலுசந்திப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்திருந்த மூன்று படையினரில் இருவர் மரணம்.

இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி படுகாயமடைந்திருந்த காத்தான்குடி பிரதேச செயலர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் பாரிசின் புறநகர்ப் பகுதியில் இலங்கை நேரப்படி மிகவும் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

# நாட்டின் பாதுகாப்பிற்கு தேசிய செயற்றிட்டம் தேவையென்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைக் கருத்தில் கொண்டு நாட்டின் பாதுகாப்பிற்கான தேசிய செயற் றிட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலியே ரத்னதேரர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போதே அத்துரலியே ரத்னதேரர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் இது தொடர்பாக அங்கு மேலும் கூறுகையில்; யாழ் குடாநாட்டிலும் கிழக்குப்பிரதே சங்களிலும் தற்போது நிலவுகின்ற பதற்ற நிலைமைகளை எதிர்கொள்வ தற்கேற்ற விதத்தில் அனைத்து மக்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு தேசிய செயற்றிட்ட மொன்றை இப்போதே உருவாக் கவேண்டுமென சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுப்பதாகக் கூறினார்.

கொழும்பு மற்றும் அதனை சூழ உள்ள பிரதேசங்களில் தேசிய பாதுகாப்பில் இன்று பாரிய சிக்கல்கள் ஏற் பட் டுள்ள தாக வும் அவர் கூறியுள்ளார்.

# காணாமல் போன 5 தமிழரில் இருவர் சடலமாக மீட்பு

(மூதூர்)

மூதூரில் காணாமல் போன ஐந்து தமிழ் இளைஞர்களில் இருவரின் சடலங்கள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பழையமுகத்துவாரம் பகுதியிலிருந்து இச் சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக மூதூர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

# இரு தமிழர் காலியில் கைது

(கொழும்பு)

காலியில் இரண்டு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் கைது செய்யப் பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் வெவ்வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ,இவர்கள் மீதான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் காலி நகர பேருந்து தரிப்பிடத் தில் வைத்தும் மற்றவர் கொஸ்கொட பிரதேசத்தில் வைத்தும் கைது செய்யப்பட்டதாக தென் மாகாண விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

இதேவேளை, கொஸ்கொடப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப் பட்டவரிடம் துப்பாக்கி ஒன்று இருந்த தாக தகவல் கிடைத்துள்ளதா உதவிப் பொலிஸ் அத்தியட்சர் கூறியுள்ளார்.

இந்தச் சந்தேக நபர்கள் என்ன நோக்கத்தில் காலிப் பிரதேசத்திற்கு வந்தார்கள் என்பது தொடர் பான விசாரணைகள் மேற் கொள்ளப் பட்டு வருவதாக தென்மாகாண விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப் பாளரான உதவிப் பொலிஸ் அத்தியட் சகர் ஹேமதிலக ஹெட்டியாரச்சி கூறியுள்ளார்.

# சைவநெறித்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக்கழகத்தினால் நடாத்தப்படவுள்ள சைவசித்தாந்தக் கருத்தரங்கை முன்னிட்டு மாவட்டரீதியில் அண்மையில் நடாத்தப்பட்ட சைவநெறித்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களினதும் பாடசாலைகளினதும் பெயர்விபரங்கள் பின்வருமாறு;

### கட்டுரை

(சைவசித்தாந்தக் கருத்தரங்கம்) முதலாமிடம் பூ.கோகிலா, கிளி/திருவையாறு ம.வி., இரண்டாமிடம் சி.துவாரகா கிளி/இராமநாத புரம் ம.வி,மூன்றாமிடம் ஆ.காயத்திரி கிளி/கிளிநொச்சி ம.வி.

### கட்டுரை

(நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டது) முதலாமிடம் ர.விதுஷா. கிளி/உருத்திரபுரம் ம.வி., இரண்டாமிடம். இ.குகரஜினி கிளி/வட்டக்கச்சி ம.வி.,மூன்றாமிடம், ச.சசிகலா, கிளி/கிளிநொச்சி ம.வி.

### குறுக்கெழுத்துப்போட்டி

முதலாமிடம்த.கீதரோகினி கிளி/இராமநாதபுரம் ம.வி., இரண்டாமிடம் த.துஷாந்தா கிளி/உருத்திரபுரம் ம.வி.,மூன்றாமிடம் ஸ்ரீ.கஜானன் கிளி/கிளிநொச்சி ம.வி.

### குறுகியவினா வெழுத்துப் போட்டி:

முதலாமிடம் பூ.கோகிலா கிளி/திருவையாறு ம.வி.,இரண்டா மிடம், செ.திவானி கிளி/கிளிநொச்சி ம.வி., மூன்றாமிடம்,பொ.சுகிர்தா கிளி/திருவையாறு ம.வி.

### பேச்சுப்போட்டி

முதலாமிடம் த.கீதரோகினி, கிளி/இராமநாதபுரம் ம.வி.,இரண்டாமிடம், அ.சவிதா கிளி/கிளிநொச்சி ம.வி.

### வினாடி வினாப்போட்டி

(அணிகள்)முதலாமிடம் கிளி/கிளிநொச்சி ம.வி. (அணி), இரண்டாமிடம் கிளி/இராமநாதபுரம் ம.வி. (அணி),மூன்றாமிடம் கிளி/திருவையாறும.வி.(அணி) -

(சோ)

# ஏழு சிறந்த விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்

(மல்லாவி)

முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்விளான் கிராமத்தில் சிறந்த ஏழு விவசாயிகளுக்கு பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான விவசாய உள்ளீடுகள் வழங்கிய நிகழ்வு கடந்த சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு கல்விளான் பொதுநோக்கு மண்டபத்தில் இடம் பெற்றது.

சி. எச். ஓ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாண்டியன்குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் ஏழு விவசாயிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உள்ளீட்டுப்பொருட்கள் வழங்கப்பட்டன. நிகழ்வுகள் கிராம புனர் அமைப்பு செயலாளர் எஸ். சோதி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை பாண்டியன்குளம், துணுக்காய் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் எஸ்.மோகன் ,பாண்டியன்குளம், துணுக்காய் புனர்வாழ்வுக் கழக தலைவர் ஈசன் ஆகியோர் வழங்கினர். விவசாயத்தை ஊக்குவித்து சிறந்த பயனை பெறவும் பொருளாதாரத்தை மேம்படுத்தி நெற்செய்கையை ஊக்குவித்து வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான இத் திட்டத்தில் பயனாளிகள் சிறந்த பயனை அடைய முடியும் எனத்தெரிவிக்கப்படுகிறது. இந்நிகழ்வில் கல்விளான் கமக்கார அமைப்பினர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் எனப்பலரும் கலந்துகொண்டனர். (24)

# கட்டாக்காலிகளின் தொல்லை சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் நிலை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதால் மக்கள் பல அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி கிராமங்களில் பிரதான வீதிகளில் கட்டாக்காலி கால் நடைகள் இரவில் தங்குவதாலும், பாடசாலை, கட்டடப்பொருட்கள் முன் பள்ளி கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தை பகுதிகளிலும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் நிலை உருவாகி வருகின்றது அத்துடன் வயல் வெளிகளில் விவசாயிகளினால் விதைக்கப்பட்ட நெற்பயிர்களையும் அழித்துவருகின்றன. கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்கள் பட்டி கட்டி வளர்க்க முன்வராததால் இவ் அழிவுகள் கட்டாக்காலி கால் நடைகளினால் ஏற்பட்டு வருகின்றது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (24)

# வியாபாரத்திற்கு மீளத்திரும்பல் திட்டம் சுவீடன் வர்த்தக சம்மேளனம் அறிமுகம்

(வவுனியா செய்தியாளர்)

சுவீடன் வர்த்தக சம்மேளனம் கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த மிகச்சிறிய, சிறிய, நடுத்தர வர்த்தகர்களுக்கு உதவும் நோக்குடன் "வியாபாரத்திற்கு மீளத்திரும்பல்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி பயனாளிகளை திரட்டுதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா புலேஸ்மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுவீடன் வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதி ல்கம்மார் நெல்சன், கிளிநொச்சி வர்த்தக சம்மேளனத்தலைவர் இக்னேசியஸ், வவுனியா வர்த்தக சம்மேளனச்செயலாளர் நந்தகுமார், உப தலைவர் நாகராஜா, பொருளாளர் சோதிநாதன், நிறைவேற்று அதிகாரி மு.சுரேஸ்குமார் ஆகியோர் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (10)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்**

## நுண்கலைமாணி இசை/நடனம் கற்கைநெறிகளுக்கான அனுமதி பரீட்சைகள்

## பல்கலைக்கழக அனுமதி 2005- 2006

# பரீட்சைத் திகதி மாற்றம்

மேற்படிப் பரீட்சைகள் தொடர்பாக பரீட்சை அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத காரணங்களினால் பரீட்சை நடைபெறும் திகதிகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

| கற்கைநெறி | புதிய திகதி | மாவட்டம் | ஏற்கனவே அறிவிக்கப் பட்ட திகதி |
|---|---|---|---|
| நடனம் | 09.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 09.12.2005 |
| | 10.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 10.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 05.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 06.12.2005 |
| | 12.12.2005 | யாழ்ப்பாணம் | 07.12.2005 |
| | | யாழ்ப்பாணம் | |
| வயலின்,வீணை, மிருதங்கம், பண்ணிசை | 09.12.2005 | யாழ்ப்பாணமும் யாழ்ப்பாணம் தவிர்ந்ததும் | 09.12.2005 |
| இசை வாய்ப்பாட்டு | 09.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 09.12.2005 |
| | 10.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 10.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 05.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 06.12.2005 |
| | 12.12.2005 | யாழ்ப்பாணம் | 07.12.2005 |
| | 13.12.2005 | யாழ்ப்பாணம் | 08.12.2005 |

*பதிவாளர்*
*05. 12. 2005.*

(சி.13433)

---

## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் கிளைகளுக்கான வருடாந்த கிளைப் பொதுச்சபைக் கூட்டம் பின்வரும் விபரப்படி அந்தந்த கிளைகளில் காலை-9.00 மணிக்கு உதவி தேர்தல் உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது

ஆகவே குறிப்பிட்ட கிளைகளுக்குரிய அங்கத்தவர்கள் தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைகளின் கிளைக்குழு உறுப்பினர்களையும் பொதுச்சபைப் பேராளர்களையும் தெரிவு செய்து உதவுமாறு வேண்டுகின்றேன். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் அறிவிப்பதற்கு கால அவகாசம் போதாமையினால் பத்திரிகை வாயிலாக இவ் அறிவித்தல் வழங்கப்படுகிறது. எனவே தயவு செய்து பூரண ஒத்துழைப்பு நல்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

**10.12.2005 ஆம் திகதி**

| கிளையின் பெயர் | நடைபெறும் இடம் |
|---|---|
| மாத்தளன் | அரசினர் தமிழ் கலவன் பாடசாலை |
| முல்லை வடக்கு | முல்லை மகாவித்தியாலயம் |
| முல்லை தெற்கு | முல்லை மகாவித்தியாலயம் |
| சிலாவத்தை | றோ.க.த.க.பாடசாலை |
| அளம்பில் | றோ.க.த.க.பாடசாலை |
| தண்ணீரூற்று | கிளை நிலையம் |
| கணுக்கேணி | கிராம முன்னேற்றச்சங்க மண்டபம் |
| கொக்குத்தொடுவாய் | நீராவிப்பிட்டி முஸ்லீம் மகாவித்தியாலயம் |
| முள்ளியவளை-ஏ கிழக்கு | கிளைநிலையம் |
| முள்ளியவளை-பீ மேற்கு | அ.த.க.பாடசாலை |
| நீராவிப்பிட்டி | முஸ்லீம் மகாவித்தியாலயம் |

**11.12.2005 ஆம் திகதி**

| கிளையின் பெயர் | நடைபெறும் இடம் |
|---|---|
| முள்ளிவாய்க்கால் | அ.அ.க.பாடசாலை |
| செம்மலை | அ.த.க.பாடசாலை |
| கொக்கிளாய் | தண்ணீரூற்று சீ.சீ.பாடசாலை |
| கேப்பாப்பிலவு | அ.த.க.பாடசாலை |
| வற்றாப்பளை | அ.த.க.பாடசாலை |
| குமுளமுனை-ஏ மேற்கு | மகாவித்தியாலயம் |
| குமுளமுனை-பீ கிழக்கு | மகாவித்தியாலயம் |

தேர்தல் உத்தியோகத்தர்,
திரு.அ.மரியாம்பிள்ளை,
கரைதுறைப்பற்று
ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி.13471)

# எண்ணெய்க்கு உணவுத்திட்ட ஊழலில் குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடமாட்டோம்

## மன்மோகன்சிங்

(புதுடில்லி)

எண்ணெய்க்கு உணவுத்திட்ட ஊழல் விவகாரத்தில் குற்றவாளிகள் யாரையும் தண்டிக்காமல் விடமாட்டோம் என்று இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

இந்திய பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்த இரண்டு பக்கஅறிக்கையில் அவர் இதைத்தெரிவித்துள்ளார்.

ஈராக்கிடமிருந்து நட்வர்சிங்கும், காங்கிரஸ்கட்சியும் எண்ணெய் ஒதுக்கீடு பெற்றதாகவும்,2001 இல் நட்வர் சிங் ஈராக்சென்றதாகவும் குரோஷியா நாட்டுக்கான இந்தியத் தூதர் அனில் மாத்ரானி வெள்ளிக்கிழமை தொலைக் காட்சிஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.அதன் அடிப் படையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மக்களவையில் அமளியில் ஈடுபட்டனர். சோனியா பதவி விலக வேண் டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அவர்களுக்குப் பதிலளிக்கும் விதமாக மன்மோகன்சிங் அறிக்கை வாசித்தார். அறிக்கை விபரம் வருமாறு;

நட்வர்சிங் மற்றும் சிலரைப்பற்றி அனில் மாத்ரானி சில தகவல் களைத்தெரிவித்துள்ளார். இவையெல் லாம் கவலைக்குரியவை அவர் தெரிவித்த தகவல்களை அமுலாக்கல் பிரிவு விசாரிக்கும். தனது விசாரணை, சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும்,விரைவில் உண்மையை வெளிக்கொணர முடியும் என்றும் அமுலாக்கல்பிரிவு மத்திய அரசிடம் உறுதியளித் துள்ளது.

முதன் முதலில் இந்த விவகாரம் வெளியே வந்ததிலிருந்து மத்திய அரசு தனது நிலையில் உறுதியாகவும், தெளிவாகவும் உள்ளது. வால்கர் குழு அறிக்கையில் உள்ள தகவல்கள் சரிபார்க்கப்படாதவை என்று நாங்கள் கூறியிருந்தோம். இந்த விவகாரத்தில் வேர் வரை சென்று உண்மையை வெளிக் கொணர அரசு உறுதிபூண்டுள்ள தாகவும் கூறியிருந்தோம். அதே நிலை யில் இப்போதும் உறுதியாக இருக் கிறோம்.

உண்மையை வெளிக்கொணர நீதிபதி ஆர். எஸ். பாடக்தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக் கப்பட்டுள்ளது. விசாரணையை விரை வாக முடிக்க அவரது விருப்பப்படி முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவரது விசாரணையின் முடிவு என்னவாக இருக்கும் என்று இப்போதே ஊகிக்கக்கூடாது.வால்கர் குழு குற்றச்சாட்டு தொடர்பான தகவல்களைத்திரட்ட வீரேந்திர தயாள் மத்தியஅரசின் சிறப்புத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பத்து நாட்களில் முக்கியமான ஆவணங்களைப் பெற்றுள்ளார்.

அரசாங்கத்தில் உள்ள எங்களைப் பொறுத்தவரை, உண்மை மிகவும் முக்கியமானது. உண்மை வெல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகி றோம். பொது வாழ்க்கையில் நேர்மை, ஒளிவு மறைவற்ற தன்மை ஆகிய உயர்ந்த குணங்களை கடைப் பிடிப்பதில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. ஆகவே குற்றவாளி கள் யாரும் தண்டிக்காமல் விடப்பட மாட்டார்கள் என்று இந்த அவையில் உறுதியளிக்கின்றேன்' என்று கூறியுள்ளார் மன்மோகன்சிங்.

# தமிழகம் உட்பட ஐந்து மாநிலங்களில் ஒரே நேரத்தில் தேர்தல்

(கொல்கத்தா)

தமிழகம் மேற்கு வங்கம் உட்பட ஐந்து மாநிலங்களில் ஒரே நேரத்தில் சட்டசபை தேர்தல் நடைபெறும் என இந்தியத்தலைமை தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். ஒரேநேரம் என்பதை ஒரேநாளில் தேர்தல் நடத்தப்படும் என அர்த்தம் கொள்ளக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் அடுத்தாண்டு சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. மேற்கு வங்க மாநிலத்தில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை குறித்து ஆராய்வதற்காக அங்கு மூன்று நாள் பயணமாக தேர்தல் ஆணையாளர் பி. பி.டாண்டன் கொல்கத்தா சென்றார். அவர் நிருபர்களிடம் கூறியதாவது;

மேற்கு வங்கம் உட்பட ஐந்து மாநிலங்களிலுள்ள அரசுகளின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மே 24ஆம் திகதியிலிருந்து யூன் 13ஆம் திகதிக்குள் வெவ்வேறு தினங்களில் முடிவடைகிறது. இதனால், இந்த ஐந்து மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தந்த மாநிலங்களிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பள்ளித்தேர்வுத்திகதிகள் உட்பட அனைத்து விடயங்களிலும் பரிசீலிக்கப்பட்ட தேர்தல் நடத்துவதற்கான திகதிகள் முடிவு செய்யப்படும். தேர்தல் நடக்கும் ஐந்து மாநிலங்களுக்கும் வாக்கு எண்ணிக்கை ஒரே நாளில் நடக்கும் பீகார் தேர்தலின் வெற்றி ஒரு நல்ல முன்னேற்றம்.

மேற்கு வங்கத்தில் தலைமை செயலக வளாகத்திலுள்ள தேர்தல் ஆணைய அலுவலகம் வேறொரு வெளியிடத்திற்கு மாற்றப்படவுள்ளது. இதன் மூலம் பொது மக்கள் மற்றும் அனைத்துக்கட்சியினரும் தேர்தல் ஆணைய அலுவலகத்திற்கு வர வசதியாக இருக்கும்.இவ்வாறு பி.பி.டாண்டன் கூறினார், இதற்கிடையில், திரிணமுல் காங்கிரஸ்தலைவர் மம்தா பானர்ஜி கூறுகையில், 'பீகாரில் நடத்தப்பட்டது போல் சுதந்திரமான வாக்குப்பதிவு மேற்கு வங்கத்திலும் நடத்தப்பட்டால், ஆளும் இடது சாரி முன்னணி கண்டிப்பாக தோல்வியடையும்' என்று கூறினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், அரசியல் குழு உறுப்பினருமான பிமன்போஸ் கூறுகையில், 'இடதுசாரி முன்னணியை ஆட்சியிலிருந்து நீக்குவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. சுதந்திரமான தேர்தலின் மூலம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்கட்சியின் வெற்றியளவை குறைக்கமுடியும் என்று சில எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன' என்று கூறினார்.

# இந்தியப் பிரதமர் ரஷ்யா பயணம்

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ரஜ்யா சென்றுள்ளார். இவருடன் இவரது பாரியார் குர்ஷான் கவுரும் பயணமாகியுள்ளார்.

விமான மூலம் மாஸ்கோ பயணமான பிரதமருடன் உயர்நிலை பிரதிநிதிகள் குழுவும் சென்றுள்ளது. இந்தக்குழுவில் வெளியுறவு செயலாளர் சியாம்சரண், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) தலைவர் மாதவன்நாயர் உட்பட இன்னும் சிலர் பயணமாகியுள்ளனர்.

அத்துடன் 14உறுப்பினர்களைக்கொண்ட தொழில் பிரதிநிதிகள் குழுவும் சென்றுள்ளது. இவர்கள் ரஷ்ய தொழிலதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இவ்விஜயத்தின்போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் இராணுவ ஒப்பந்த அறிவுசார் சொத்துரிமை, 2010 ஆம் ஆண்டுவரையான இந்திய- ரஷ்ய இராணுவத்தொழில்நுட்ப ஒத்துழைப்புத்திட்டம் தொழில்நுட்பபாதுகாப்பு, சூரிய இயற்பியல் திட்டம் உட்பட பலவிடயங்கள் குறித்து பிரதமர் கலந்துரையாடவுள்ளதுடன் இது தொடர்பான சில ஒப்பந்தங்களில் [illegible] நாடுகள் சார்பில் இவர்கள் கைச்சாத்திடவுள்ளதாக தெரிவிக்கப்படு[illegible]


## Save the Children in Sri Lanka

### Job Advertisement

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organization working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

Vacancy exists for the following position

**Job Description**

| | |
|---|---|
| **Job Title** | **Human Resources Administration Assistant** |
| **Reporting to** | Administrator - Finance |
| **Grade & salary** | "C" |
| **Location** | Kilinochchi |
| **Job purpose** | Working with Save the Children team and other stakeholders to ensure emergency preparedness in place at organizational and programm elevels. |

The role of the HR/Administration Assistant-Regional/Programme office is a coordinating roll to ensure that the required support to the programme is provided at all times.

Key responsibilities

**Line Management**

**The HR/Administration Assistant- Regional/Programme Office is based in the regional/Programme office. He/She is responsible to the Administrator – Finance for all staff meters and administrative matters.**

**The HR/Administration Assistant- Regional/Programme Office will be line managed by the Administrator – Finance in the respective Regional/Programme Office. He/ She will in turn line manage the outsourced office aides.**

**1.Administrative Responsibility**

To be responsible for over all organization and day to day running and maintenance of the office. This includes;

- Ensure that the office is well maintained.
- Ensuring that all regular maintenance of equipment is undertaken appropriately
- Ensuring that appropriate HR/Administrative Systems are in placed and maintained.

**1.Staff responsibility**

- Monitoring all personnel Administration including checking claims, leave records, Etc...
- Ensuring that the DM is informed of any staff matters (i.e.; Staff discipline, Etc...) that need to be resolved by the management.

**2.Other responsibility**

- Maintaining office stationary supplies and systems and responsible for establishing and effectively managing an office library and/ or resource center, using lib says
- Managing all out going and in coming mail in the Regional/ Program office and ensuring accurate records in this regard are maintained.
- Ensuring the proper maintenance of all files and documents (i.e. record keeping, circulation documents/ periodicals, photocopying, etc.) in the Regional/ Program office.
- Ensuring that the leases of all premises pertaining to the particular Regional/ Program office including residences of expatriates and staff guest houses are maintained properly and renewed on time.
- Supporting the senior logistician and DM on security related issues in the Regional/Program office.
- Maintaining the good working relationship with the logistics and Finance Units and providing support as required.
- Willingness to undertake any other relevant responsibilities entrusted to you by the line manager and management team as and when requested.

**Person Specifications**
**Essential Requirements:**

1. **Proven experience of setting up and maintain administrative systems covering Personnel and administration.**
2. **Good report writing and interpersonal /Communication skills.**
3. **Teamwork, effective time management and leadership skills.**
4. **Sound educational background.**
5. **Fluency in written and spoken English, Tamil and /or Sinhala.**
6. **Hands on experience in Microsoft Excel and Word computer packages.**

**Others:**

1. Ability to maintain confidentiality and professional ethics in all aspects of work undertaken.
2. A commitment to the principles of SC's work and the promotion of equality of opportunity

**Desirable**

- Experience of working with children and understanding of child rights and child rights based approaches to programming.
- Experience in relief/development/community service work.

**A highly competitive remuneration package awaits the selected candidates.**
The above positions would be initially for a period of one year.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years. The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees on or before **14 November 2005** to:

**Save the Children in Sri Lanka**
**142, Kandy Road , Kilinochchi Regional Office**
**Only applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries please**

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education**, **Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony** and **Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

(சி. 13434)

# மாவீரர் கிண்ண கால்பந்து, கரப்பந்து போட்டி புனித லூசியா, புனிதமரியாள் அணிகள் சம்பியன்





மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை நடாத்திய கால்பந்து, கரப்பந்துப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.


மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 31கழகங்கள் பங்கேற்ற கால்பந்துபோட்டியின் இறுதிப் போட்டியில் உதையா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் பள்ளிமுனை புனிதலூசியா அணி 7-0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவீரர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

போட்டியின் சிறப்பாட்ட வீரராகவும் தொடர் நாயகனாகவும் புனிதலூசியா விளையாட்டுக்கழக வீரர் சாந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

16கழகங்கள் கலந்து கொண்ட கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் துள்ளுகுடியிருப்பு புனித மரியாள் அணியும் தாராபுரம் கின்னாஅணியும் மோதின.

இதில் புனித மரியாள் அணி 3-2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.





# பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டி இங்கிலாந்து அணித் தலைவராக இயன் பெல்



பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பாகிஸ்தானுக்கு எதிரான ஐந்து ஒருநாள் போட்டிக்கு இயன் பெல் அணித் தலைவராக கடமையாற்றவுள்ளார்.

அணித்தலைவர் மைக்கல் வோகன் முழங்கால் காயத்துக்கு சிகிச்சை பெற இங்கிலாந்து செல்லவுள்ளதால் ஒரு நாள் தலைவராக இளம் வீரர் இயன் பெல் நியமிக்கப்பட்டுள்ளார். மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற நிலையில் இழந்த இங்கிலாந்து அணி ஒரு நாள் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் உள்ளது.

இதேவேளை டென்னில் எல்போவினால் பாதிக்கப்பட்டு டெஸ்ட் அணியில் இடம் பெறாதிருந்த பாகிஸ்தானின் சகலதுறை வீரர் அப்துல்ரசாக் ஒருநாள் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

# சம்பியன் லீக் கால்பந்து போட்டி; முன்னணி அணிகளுக்கு பின்னடைவு




உதைபந்தாட்டத்தில் முன்னாள் சம்பியன்லீக் வெற்றிக்கழகங்களான ஏ.சி.மிலன், மான் யுனைட்டட், போர்ட்டோ ஆகியன அண்மையில் நடைபெற்ற குழுக்களின் இறுதிப்போட்டியில் விலகல் முறைப்போட்டிக்கு தகுதிபெற தவறியதால் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன.

ஈ பிரிவிலுள்ள மிலான் கழகம் அதே குழுவிலுள்ள எய்ன்டோவன் கழகத்திடமும் 'டி' பிரிவிலுள்ள மஞ்செஸ்ரர் யுனைட்டட் பெனிபிசா கழகஅணியிடமும் தோல்வியை சந்தித்துள்ளன.

ஐரோப்பிய சம்பியன் போட்டியில் ஆறுமுறை லிவர்பூலை வென்ற மிலன் தற்போது இந்தப் பின்னடைவை கண்டுள்ளது.

# தனக்கு விருப்பமில்லாத வீரர்களை நீக்க பயிற்சியாளர் சப்பல் இலக்கு வைத்துள்ளார்

*—முன்னாள் வீரர் யஷ்பால் சர்மா—*



முன்னாள்இந்திய கிரிக்கெட் வீரரும் பதவி நீக்கப்பட்ட தேர்வாளர் குழு உறுப்பினருமான யஷ்பால் சர்மா தற்போதைய பயிற்றுநர் கிறேக் சப்பல் தனக்கு விருப்பமில்லாத வீரர்களை நீக்குவதற்கு இலக்குப்பார்த்திருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

முதலில் கங்குலியை நீக்க வேண்டி இருந்ததாகவும் தற்போது சேவாக், ஹர்பஜன் சிங், சஹிர்கான் ஆகியோர் மீது அவரது பார்வை திரும்பியுள்ளது என்றும் சர்மா தெரிவித்துள்ளார். தற்போது சிறிலங்கா அணியுடனான போட்டிகளுக்கான இந்திய அணி வீரர்கள் மீதும் அவர் நேர்மையாக நடந்து கொள்வது சந்தேகமே என்று கூறிய சர்மா, தனது நேர்மை பற்றி அவர் கேள்வி எழுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். யஷ்பால் சர்மா பிரணாப்றோய்ப், கோபால் சர்மா ஆகியோர் அரசியல் தலையீட்டின் மூலம் தேர்வாளர் குழுவில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக புவிந்தர் சிங், ரஞ்சிப் பிஷ்வல், சஞ்சே ஜெகதால் போன்ற கிரிக்கெட் அனுபவமற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யஷ்பால் சர்மா மேலும் குறிப்பிடுகையில்; தான் டால்மியாவின் ஆதரவாளர் என சப்பல் தெரிவித்ததாகவும் அதனால் தான் மிகவும் வேதனையடைந்துள்ளதாகவும் கூறினார். இவர் 1970 முதல் 80 வரை 37 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 1,606 ஓட்டங்களையும் 42 ஒருநாள் போட்டியில் 883 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

# ஐந்து ஓட்டம் பெற்ற கங்குலி



நீண்ட இடைவெளிக்குப்பின் இந்திய டெஸ்ட் அணியில் இணைக்கப்பட்ட முன்னாள் அணித்தலைவர் கங்குலி சென்னையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஐந்து ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரின் எதிர்கால சர்வதேச கிரிக்கெட் வாழ்வை தீர்மானிக்கப்போகும் தொடராக அமைந்துள்ள மேற்படி டெஸ்ட் தொடரில் அவர் ஐந்து ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துள்ளது துரதிர்ஷ்டமாக அமைந்துள்ளது.


சென்னை டெஸ்ட் போட்டி முழுமையாக நடைபெறாததால் இப்போட்டி அவரை பாதிக்காது என்று தெரிவிக்கப்படுகின்றபோதும் இத்தொடர் கங்குலிக்கு முக்கியமான தொடராக அமைந்துள்ளது.

இதேவேளை சச்சின் 126 பந்துகளை எதிர்கொண்டு 26 ஓட்டங்களை மட்டும் பெற்று ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்தார்




## உ.கோ. கால்பந்து தகுதி பெற்ற 32 அணிகள்

அடுத்த ஆண்டு ஜெர்மனியில் நடைபெறவிருக்கும் உ.கோ. கால்பந்து போட்டிக்கு தகுதி பெற்றுள்ள அனைத்து அணிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. டிசம்பர் 9ல், மோதும் அணிகள் பட்டியல் வெளியிடப்படும்.



**ஐரோப்பா**
ஜெர்மனி (போட்டி நடத்தும் நாடு)
செக் குடியரசு
போர்ச்சுக்கல்
பிரான்ஸ்
ஸ்பெயின்
குரோசியா
இங்கிலாந்து
சுவிட்சர்லாந்து
இத்தாலி
ஹாலந்து
போலந்து
ஸ்வீடன்
செர்பியா
உக்ரைன்

**அமெரிக்கா**
கோஸ்டரிகா
மெக்ஸிகோ
டிரினாட்
அமெரிக்கா

**தெ.அமெரிக்கா**
அர்ஜென்டினா
பிரேசில்
ஈக்வேடார்
பராகுவே

**ஆசியா**
ஈரான்
ஜப்பான்
சவுதி அரேபியா
தெ.கொரியா

**ஆப்ரிக்கா**
அங்கோலா
ஐவரிகோஸ்ட்
கானா
டோகோ
துனிசியா

**ஓசியானியா**
ஆஸ்திரேலியா

# சமநிலையில் முடிவுற்ற சென்னை டெஸ்ட்



இந்திய- சிறிலங்கா அணிகளுக்கிடையில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. முதலில் ஆடிய இந்திய அணி 167 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

மழைகாரணமாக மூன்று நாட்கள் நடைபெறாத நிலையில் நான்காம் நாளான நேற்று முன்தினம் 3.30 மணிக்கு ஆரம்பமான மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய இந்தியா அன்றைய ஆட்ட நேர நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களை பெற்றிருந்தது.


இறுதி நாளான நேற்று தொடர்ந்து ஆடிய இந்தியா 167 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.



துடுப்பாட்டத்தில் சேவாக் 36, ராவிட் 32, டோனி 30, சச்சின் 26 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். லக்ஸ்மன், கங்குலி தலா ஐந்து ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் சமிந்தவாஸ் நான்கு விக்கெட்டுக்களையும், முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு தனது முதலாவது இனிங்சை ஆடிய சிறிலங்கா அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை பெற்ற போது ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. துடுப்பாட்டத்தில் ஜெயவர்த்தன 71, சங்கக்கார 30, சமரவீர ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கும்ளே மூன்று விக்கெட்டுக்களையும், பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக சமிந்த வாஸ் தெரிவானார்

## சிந்தனைக்கு



சுதந்திர எழுச்சியின் உந்து தலால் தான் மனிதவரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சமாதான வாய்ப்பு புறக்கணிப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு வழங்கிய கால அவகாசம் பொருட்படுத்தத்தக்கதல்ல எனவும் அதனைத் தாம் நிராகரிப்பதாகவும் அரசியல் அமைப்பு விவகாரம், தேசிய நல்லிணக்க அமைச்சர் டியூ குணசேகர அரச தரப்பின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேசமயம் அரசின் கூட்டாளிகளான ஜாதிக ஹெல உறுமயவும் விடுதலைப்புலிகளின் காலக்கெடுவிற்குத் தாம் காது கொடுக்கத் தேவையில்லை எனக்கூறிக் கால அவகாசத்தினை முற்றாக நிராகரித்துள்ளது. இதன் மூலம் இவர்கள் சமாதானத்திற்கான வாய்பை நிராகரித்துள்ளனர்.

இதேவேளை சனாதிபதி மகிந்தராஜபக்ஷ தாம் யுத்தத்தை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டாலும் அவரது அனைத்து நடவடிக்கைகளும்,யுத்தத்திற்கு ஆதரவாகவே உள்ளன. அவர் தனது அமைச்சரவையை அமைத்ததில் இருந்து ஆயுதப் படைகளின் தலைமைப்பீடத்தை மாற்றி அமைத்தது வரையில் செய்துள்ள நியமனங்கள் இதனையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

மகிந்தராஜபக்ஷ தேசியத்தலைவரின் உரைக்கு முன்பாகவே கடும் கோட்பாட்டாளர்களை தனது அரசியலில் முதன்மைப்படுத்தத் தொடங்கியிருந்தார். அவர் ரட்ண சிறிவிக்கிரம நாயக்கவை பிரதம ராகத் தெரிவு செய்தபோதே இது வெளிப்பட்டது. தேசியத்தலைவரின் உரையின் பின்னர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை அவர் தெரிவு செய்துள்ளமை இதனை உறுதிப்படுத்தியது.

இதற்கு அடுத்ததாக சனாதிபதி மகிந்தராஜபக்ஷ முதலில் மேற்கொண்டமாற்றங்களில் முக்கியமானது இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொடவை பதவியில் இருந்து வீட்டிற்கு அனுப்பியமையும் புதிய இராணுவத்தளபதியாக லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவை நியமனம் செய்துள்ளமையும் ஆகும்.

சிறிலங்கா இராணுவத்தளபதிகள் யாராக இருப்பினும் அது குறித்து தமிழ்மக்கள் அக்கறை கொள்ள எதுவுமில்லை. எனினும் சரத் பென்சேகாவை மகிந்தராஜபக்ஷ நியமித்தமையானது ஒரு போர் விரும்பியை இராணுவத்தளபதியாக நியமித்துள்ளார் என்றே கொள்ளத்தக்கது. அதாவது யுத்தத்தை யாசித்து நிற்பவரை இராணுவத் தளபதியாக்கியுள்ளார் எனலாம்.

இத்தனைக்கும் லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவை வெளியில் அனுப்புவதற்காக சனாதிபதி சந்திரிகாஅவருக்கு வழங்கிய பதவி நீடிப்பிற்கான உத்தரவை இரத்துச் செய்ததோடு புதிய தளபதியாக சரத்பொன்சேகாவை நியமிப்பதிலும் அக்கறை கொண்டிருந்தார். இத்தனைக்கும் எதிர்வரும் 16ஆம் திகதியுடன் லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவின் பதவிக்காலத்திற்கான வய தெல்லை முடிவடைகின்றது. ஆனால் இதனை சனாதிபதி மகிந்த பொருட்படுத்தியதாக இல்லை.

அதாவது சாந்தகொட்டேகொடவின் வயதெல்லையைக் காரணம் காட்டி அவரை வீட்டிற்கு அனுப்பிய அவர் சரத்பொன்சேகாவை அவ்வாறு அனுப்பிவிடப்போவதில்லை. ஏனெனில் இன்று சரத் பொன்சேகா சனாதிபதியின் தேவைக்கு அவசியமாகவுள்ளார். அதாவது யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல சரத்பொன்சேகா போன்றவர்கள் அவசியமானவர்களாகவுள்ளனர்.

இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் மூத்த ஆலோசகராக முன்னாள் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய நியமிக்கப் பட்டமையும் இத்தகையதொரு நடவடிக்கையே. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்க்கும் தீவிர சக்தியான ஜாதிக ஹெலஉறுமயவின் முக்கிய உறுப்பினர்களில் கொட்டக தெனிய ஒருவராவார். இவர் யுத்தத்தில் தீவிரம் காட்டுவதொன்றும் அதிசயமல்ல.

இதனைத் தவிர பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் இனப்பிரச்சினை விடயத்தில் கடும்கோட்பாட்டாளர் என்ற நிலைப்பாட்டைக் கொண்டதாகவே உள்ளார்.

அதாவது சனாதிபதி மகிந்தராஜபக்ஷ யுத்தத்தை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டபோதும், அவர்கள் செய்துள்ள நியமனங்கள், மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவும் யுத்தத்தை ஆதரிப்பதாகவும், யுத்தத்திற்கான செயற்பாடுகளாகவுமே உள்ளது.

இந்தவகையில் சிறிலங்கா ஆட்சியாளர்கள், தற்பொழுது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மறைமுக யுத்தத்தை தீவிரப்படுத்தவோ அன்றி நேரடி யுத்தத்தை தொடங்கவோ மேற்கொள்ளப்படும் தயாரிப்பாகவே கொள்ளத்தக்கதாகவுள்ளது. ஆகையினால், தேசியத்தலைவரினால் கொடுக்கப்பட்ட கால அவகாசம் என்பது சமாதான நடவடிக்கைகளுக்குப் பயன்படு வதாக இல்லை.

ஆனால் அது தமிழ் மக்களுக்கோ அன்றி விடுதலைப் புலிகளுக்கோ ஏமாற்றம் அளிப்பதாக இருக்கப்போவதில்லை. ஏனெனில், பௌத்த சிங்களப் பேரினவாதிகள் எப்பொழுதுமே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளித்ததாக இல்லை. ஆனால், ஒன்று இப்பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகள் தேசியத் தலைவர் வழங்கிய கால அவகாசத்தை புறந்தள்ளுவதால் ஏற்படப் போகும் விளை[illegible]ளைத் தற்பொழுது மதிப்பீடு செய்திருப்பார்கள் என்பதற்கில்ல

# கொட்டகதெனியவிடம் பொலிஸ் விவகாரங்கள்

# சிறிலங்கா பொலிஸ்உயர்மட்டத்தில் அதிருப்தி!

(கொழும்பு)

சிறிலாங்கா பாதுகாப்புத் துறையின் மூத்த ஆலோசகரான கொட்டகதெனிய நியமிக்கப்பட்டு அவரிடம் சிறிலாங்கா பொலிஸ் விவகாரங்களும் ஒப்படைக்கப் பட்டுள்ளதால் பொலிஸ் தரப்பினர் அதிருப்தி அடைந்துள்ளதாகக் கூறப் படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிறிலங்கா பொலிஸ்துறை கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வளவு காலம் அது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே இருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொறுப்பின் கீழ் பொலிஸ்துறை கொண்டு வரப்பட்டதையடுத்து அதன் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய நியாமிக்கப் பட்டுள்ளார்.

கொட்டகதெனியவை பொலிஸ் துறை விவகாரங்களுக்குப் பொறுப்பான வராக நியமித்ததில் பொலிஸ் தலைமையகத்திலிருக்கும் சில அதிகாரிகளுக்கு உடன்பாடு இல்லை என்றும் அவர்கள் அதிருப்தியில் இருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே சிறிலங்கா மக்களின் அமைதிக்காக சேவை யாற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களை சனாதிபதி தனக்கு வழங்கியிருப்பதாக கொட்டக தெனிய தெரிவித்துள்ளார். தான் பொறுப்பேற்ற உடனேயே அதற்கான நடவடிக்கை களை எடுப்பதாகக் கூறிய அவர் அது எவ்வாறான செயற்பாடு என்பதை அறியத்தர முடியாது என்றும் கூறி னார்.

# பிரபாகரனின் உரைக்கு அரசாங்கம் எதிர்வினையாற்றத் தேவையில்லை!

## -ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

அமைதிப் பேச்சுக்களை உடனே தொடங்குமாறு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்திருக்கும் அறிக்கைக்கு சிறிலங்கா அரசாங்கம் எதிர்வினையாற்றத் தேவையில்லை என்று ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிகஹெல உறுமயவின் ஊடகச் செயலாளர் நிசாந்த சிறிவர்ண சிங்க கூறியுள்ளதாவது;

அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துக்களின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட அமை தித்திட்டத்தின்படி சிறிலங்கா பேச்சு வார்த்தையைத் தொடங்க வேண்டும்.

பயங்கரவாத இயக்கம் விடுத்திருக்கும் எச்சரிக்கையைத் தொடர்ந்து தன்னிச்சையாக தனது அமைதித் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது. அமைதிப் பேச்சுக்களை உடனே தொடங்க வேண்டும். இல்லையெனில் போர் தான் என்று பிரபாரகன் தெரிவித் துள்ளார். இது விடயத்தில் அரசாங்கம் எதிர்வினையாற்றத் தேவையில்லை என்பதுதான் ஜாதிகஹெல உறுமய வினது நிலைப்பாடு.

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது மகிந்த சிந்தனை களில் அனைத்துக் கட்சியினது இணக்கப்பாட்டுடன்தான் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. இந்த அமைதிப் பேச்சுக் களானது ஒற்றையாட்சிக் கோட் பாட்டின் கீழ் தான் இருக்க வேண்டும் என்று மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகளான ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றுடன் அமைதிப் பேச்சுக்களுக்கான செயற் றிட்டம் தொடர்பாக அரசாங்கம் கண் டிப்பாக விவாதிக்க வேண்டும் என்றார் அவர்.

## -முன்னாள் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட-

# முதலீட்டு சபைத்தலைவரை பதவி விலக நிர்ப்பந்தித்திருந்தமைக்கு அமைச்சர் மீது கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா முதலீட்டுச் சபையின் தலைவர் பதவியிலிருந்து தம்மைப் பதவி விலகுமாறு முதலீட்டு மேம் பாட்டுத்துறை அமைச்சர் ஆர்.போகல் லாகம கேட்டுக்கொண்டது சட்ட விரோதமானது என்று சாலிய விக்கிரமசூர்ய குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா முதலீட்டுச் சபையின் தலைவராக சாலிய விக்கிரமசூர்யவை முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருந்தார். ஆனால் சனாதிபதி பொறுப்பேற்ற மகிந்த ராஜபக்ஷ நியமித்த புதிய அமைச்சர் போகல்லாகம சாலிய விக்கிரம சூர்யவை உடனே பதவி விலகுமாறு கூறியதையடுத்து சாலிய விக்கிரம சூர்யவையும் பதவி விலகினார். முதலீட்டுச் சபைச் சட்டத்தின்படி தம்மை சனாதிபதி மட்டுமே நீக்க முடியும். ஆனால் எம்மைப் பதவி விலகுமாறு போகல்லாகம அச்சுறுத் தியதையடுத்து தாம் பதவி விலகிய தாக கொழும்பு ஊடகவியலா ளர்களிடம் சாலிய விக்கிரமசூர்ய கூறினார்.

முதலீட்டுச்சபை பொறுப்பில் தாம் நீடிப்பதை அவர்கள் விரும்பவில்லை என்று கூறி முறைப்படி எம்மிடம் பதவி விலகக் கோரியிருந்தால் எமது கடிதத்தை அனுப்பியிருப்பேன் என்றும் அமைச்சரின் இத்தகைய செயற்பாடுகளால் நாடு நாசமடைந்து விடும் என்றும் சாலிய விக்கிரமசூர்ய தெரிவித்துள்ளார்.

# மருத்துவர்களுக்கு பாரிய ஆளணித் தட்டுப்பாடு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

மருத்துவர்களுக்கான பாரிய ஆளணித் தட்டுப்பாடு தற்சமயம் நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியகலாநிதி உதித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலதிக விபரம் தெரிவிக்கையில் மருத்துவர் களுக்கான பாரிய பற்றாக்குறை நாட்டின் கிராமப்புறங்களில் நிலவு கின்றன. பொலநறுவ, அநுராதபுரம், இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களில் இந்த பற்றாக்குறை அதிகளவில் நிலவுவதை உதாரணமாகக் கொள் ளலாம்.

மருத்துவர்களின் பற்றாக்குறை காரணமாக மருத்துவசேவை சீர் குலைந்துள்ளது. மிகுந்த கஷ்டத்தின் கீழ் குறைந்த சேவைகளையே இதன் காரணமாக எம்மால் செய்யக் கூடியதாக இருக்கின்றது. எமது நாட்டில் முன்னர் திறமைக்கு முதலிடம் அளிக்கப்பட்டே மருத்துவ சேவைக்கான ஆள் அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

தற்சமயம் திறமையான மருத்து வர்கள் மேல் மாகாணத்திலோ அல்லது கொழும்பு பிரதேசத்திலோ மட்டுமே நியமிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக கிராமப்புற மக்களுக்கு உரிய சேவைகளை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.

இது தவிர புதிய மருத்துவர்கள் தமது பயிற்சியை முடித்து ஒன்பது மாதகாலத்தின் பின்னரும் அவர் களுக்கு வேலை வழங்கப்பட வில்லை. இது குறித்து சனாதி பதியின்கவனத்திற்குஅரசாங்க மருத் துவ அதிகாரிகள் சங்கம் கொண்டு வரவுள்ளது என்றும் கூறினர். (32)

# கதிர்காமர் கொலை சந்தேக நபரை விடுவிக்க சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்கா முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சார்ல்ஸ் ஞானக்கோனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத் திற்கு அறிவித்துள்ளார்.

ஞானக்கோனை விடுதலை செய்யுமாறு தாக்கல் செய்யபப்பட்ட மனு நேற்றுமுன்தினம் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் இது குறித்து நீதிமன்றத் திற்கு அறிவித்தார்.

சட்டமா அதிபர் முன்வைத்த விடயம் தொடர்பில் தாம் திருப்திய டைவதால் தாம் தாக்கல் செய்த மனுவைத் திரும்பிப் பெற்றுக்கொள்ள அனுமதி தருமாறு ஞானக்கோனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றிடம் கோரினார். இதனை ஆராய்ந்து நீதிமன்றம் மனுவை விலக்கிக்கொள்ள அனுமதி வழங் கியது. (32)

# இயல்பான கற்றல் செயற்பாடுகளுக்கு வழிவிடுக மாணவர்களின் கோரிக்கை படையினரால் நிராகரிப்பு

## -இன்று முதல் போராட்டத்தை விரிவாக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாணவர்களது இயல்பான கற்றல் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்ததலாக அமையும் இராணுவத்தினரது நடவடிக்கைகள் உடன் கைவிடப்பட வேண்டும் என்ற மாணவர்களது கோரிக்கைகளை படைத்தரப்பு முற்றாக நிராகரித்துள்ளது.

இந் நிலையில் இன்று முதல் குடாநாட்டின் அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பருத்தித்துறை இராணுவ முகாமில் சிறிலங்கா இராணுவத் தளபதிகளுக்கும் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றிய தலைவர் ப.குணேந்திரன் உட்பட்ட மாணவ பிரதிநிதிகளுக்குமிடையே முகங்கிய சந்திப்புபொன்று இடம் பெற்றது.

. இலங்கைப்போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினரது ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மாணவர்களது இயல்பான கற்றல் செயற்பாடுகளுக்கு வழிவிடும் வகையில் பாடசாலைகளை ஆக்கிரமித்துள்ள இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயங்கள். பாடசாலைகளுக்கு சமீபமாக இருக்கும் இராணுவ முகாம்கள் காவலரண்கள் என்பன அகற்றப்படல் வேண்டும் என்று வலியுறுத்திய மாணவர் பிரதிநிதிகள். ஹாட்லிக் கல்லூரி வளாகத்துள் அமைக்கப்படும் இராணுவ அரண்களை அமைக்கும் பணிகள் உடன் கைவிடப்படல் வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் மாணவர்கள் வலியுறுத்துவது போல தம்மால் செயற்படமுடியாது எனக்கூறி மாணவர்களின் கோரிக்கைகளை நிராகரித்த இராணுவ அதிகாரிகள் அரசின் உத்தரவுகிடைத்தால் மட்டுமே மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது சாத்தியப்படும் என்றும் கூறினர்.

இந் நிலையில் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில்:-

உரிமைக்காகப் போராடும் மாணவர்களின் மீது அவர்களை அடக்கும் முகமாக சிறிலங்கா இராணுவம் தமது ஆயுத பலத்தைப் பிரயோகிப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு பாரிய பின் விளைவுகள் ஏற்படுமெனவும் எச்சரிக்கின்றோம்.

மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடப்பட்டு வடமராட்சியில் இடம்பெற்ற போராட்டத்திற்கு அரசுத் தரப்பும் இராணுவத் தரப்பும் இதுவரையில் பதிலெதுவும் தராத நிலையில் அனைத்துக் குடாநாட்டு மாணவர்களும் இனிவரும் தினங்களில் தொடர்ச்சியாக கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கவுள்ளோம்.

தொடர்ந்தும் பதில் தராமல் இழுத்தடிக்கப்படுமானால் க.பொ.த.(சா/த) பரீட்சையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் ஒன்பதாம் திகதி மாலையுடன் எமது போராட்டத்தினை தற்காலிகமாக இடை நிறுத்தி பரீட்சை முடிவடைந்தவுடன் குடாநாடெங்கும் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்களை மாணவர்களாகிய நாங்கள் முன்னெடுப்போம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (28,33)

## ஜப்பானின் விசேட பிரதிநிதி இன்று கொழும்பு வருகை

இலங்கையில் சமாதானத்தைக் கட்டி எழுப்புதல் புனர்வாழ்வு புனரமைப்பு என்பனவற்றிக்கான ஜப்பானிய அராசங்கத்தின் பிரதிநிதி யசூசி அகாஷி ஆறுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகிறார்.

இவரது விஜயம் தொடர்பாக ஜப்பானியதூதரகம் விடுத்த ஊடகச் செய்திக் குறிப்பில் இந்த விஜயத்தின்போது சிறிலங்கா சனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் தொடர்புடைய தலைவர்கள் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு சனாதிபதி அழைப்பு

இலங்கையின் அரசியல் நிலை குறித்தும் சமாதான முன்னெடுப்புகள் குறித்தும் ஆராய்வதற்கு அனைத்துக் கட்சிகளினதும் கூட்டம் ஒன்றிற்கு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

எதிர்வரும் 12ஆம் திகதி இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாக சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டத்திற்கு முன்னர் அனைத்துக் கட்சிகளையும் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (32)

## யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறலுக்கு அமெரிக்கா கவலை

(கொழும்பு)

சிறிலங்காவின் யுத்தநிறுத்த உடன்படிக்கை கடந்த சில வாரங்களில் மீறப்பட்டுவருவதாக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. அமெரிக்க தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பிலேயே அமெரிக்கா ஆழ்ந்த கவலை தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை முக்கியமாக கடந்த சில வாரங்களில் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து மீறப்படுவதாகவும் அந்த அறிக்கையில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்முறைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து போர்நிறுத்த உடன் படிக்கை நிபந்தனைகளைக் கடைப்பிடிக்குமாறு சிறிலாங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### தமிழர்...

என்று கூட்டத்தில் பலரும் வற்புறுத்தினர்.

இது தொடர்பாக அடுத்து மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கை தொடர்பாக டிசம்பர் 20 ஆம் திகதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பற்றும் கூட்டம் ஒன்று நடத்தப்படும் என்றும் பேரவைத் தலைவர் விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

### வன்முறைகளைக்..

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதத்தலத்துக்குள் இப்படியான சம்பவங்கள் நடைபெறுவது மோசமான செயல் என்றும் எழிலன் கூறினார். மேலும் சிறிலங்கா பொலிஸ் முன்னிலையிலேயே தமிழர்கள் இருவர் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா பொலிசாரின் திட்டமிட்ட போக்கையே இது காட்டுகின்றது என்றும் எழிலன் தெரிவித்தார்.இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற முஸ்லிம்களின் பிரதிநிதி லத்தீப், தமிழ்மக்கள் மீது முஸ்லிம்கள் மேற்கொண்ட வன்முறைகளுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

### இராணுவ.

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை.

பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்த மாணவர்கள் ஹாட்லிக் கல்லூரி உட்பட யாழ். குடாநாட்டில் இராணுவக் கெடுபிடிகளால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் நேற்று முன்தினம் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களது ஆர்ப்பாட்டங்களை வன்முறைகள் மூலம் இராணுவம் கட்டுப்படுத்த முனைந்தமைக்கும் கண்டனம் தெரிவிக்கும் வகையில் வீதிகளில் இறங்கி படையினருக்கு எதிரான போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

அத்துடன் இராணுவத்தின் விநியோகப் பணிகளை முடக்கும் வகையில் வடமராட்சியில் உள்ள பிரதான வீதிகள், சந்திகள் என்பவற்றில் வீதித் தடைகளை ஏற்படுத்தி ரயர்களைப் போட்டு எரித்தும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதனால், இராணுவ முகாம்களுள் முடக்கமடைந்த இராணுவத்தினர் தம்முகாம்களை நெருங்குவோரைத் தாக்கினர். இதனால் ஆத்திரமடைந்த மாணவர்களும் பதிலுக்கு இராணுவத்தினரைத் தாக்கினர். இதேவேளை போராட்டம் நடத்திய மாணவர்களைச் சுற்றிவளைக்க முயன்ற படையினரை நோக்கி பொதுமக்கள் கற்களை வீசி விரட்டியடித்தனர்.

இதனையடுத்து பிரதான நகரங்களில் உள்ள கடைகள் மூடப்பட்டன. சந்தைகள் கலைந்தன. போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன. வடமராட்சியே வெறிச்சோடியது.

இப்போராட்டம் இன்று யாழ். குடாநாடு முழுவதற்கும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33, கா)

### இருபாலை..

அவர்கள் தொடர்ந்தும் வீடுகளிலேயேதங்கியுள்ளதாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் கூறினர்.

மேலும் இருபாலைச்சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள கடைகள் இராணுவத்தினரால் அடித்து நொருக்கப்பட்டதுடன் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள். பணம், நகைகள் என்பன கொள்ளையடித்து செல்லப்பட்டுள்ளன.

இருபாலைச்சந்தியில் உள்ள நகைக்கடையொன்றில் இருந்துசுமார் இரண்டரை லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட நகைகள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன

இதேபோன்று அங்கிருந்த தேநீர்க் கடையொன்றில் இராண்டாயிரத்து ஐநூறு ரூபா பணம் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

காலை10.00 மணியளவில் சம்பவம் இடமபெற்றபோதிலும் பிற்பகல் 5.00 மணிக்குப்பின்னரே இராணுவத்தினர் இருபாலைச்சந்தியில் இருந்து விலகிச்சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கீ,33,41)

### இரு..

பட்டுள்ளனர். இதுகுறித்த முறைப்பாடு தங்களுக்குக் கிடைத்திருப்பதாக போர்நிறுத் தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்ட அலுவலக வட்டாரங்கள் நேற்றுமாலை தெரிவித்தன. (25)

### யாழ்..

நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர்.

நல்லூர் இருபாலைப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

### கஞ்சி...

பினர்களான இனியபாரதி, சுமன், தேவன், சுரேஸ் ஆகியே நால்வருமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த ஞானதீபன் மற்றும் புகழவேந்தன் ஆகியோர் தெரிவித்துள்ளதாவது சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரின் உத்தரவிற்கு அமைய அக்கரைப்பற்று பள்ளிவாசல் மீது இனியபாரதி தலைமையிலேயே கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதனையடுத்து தமிழ் - முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தும் நாசகார நோக்குடன் இனியபாரதி தலைமையில் பல கொலைகள் நடாத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர்கள், இதனால் விரக்தியடைந்திருந்த தாம், இனியபாரதி தலைமையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடாத்த வந்தபோது, இனியபாரதி உட்பட நால்வரை சுட்டுக்கொன்றுவிட்டு விடுதலைப் புலிகளிடம் சரணடைந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரின் பன்னவில முகாமிலிருந்தே தாம் செயற்பட்டதாகவும், நேற்று அதிகாலை சிறப்பு அதிரடிப் படையினரின் ஒத்துழைப்புடனேயே விடுதலைப்புலிகளின் பகுதிகளிற்கு ஊடுருவியதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### கிளைமோர்..

உழவு இயந்திரம் இராணுவத்தினருக்குக்கான உணவு விநியோகப் பணியில் ஈடுபட்டுவிட்டு இருபாலை இராணுவ முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்த சமயமே அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், சம்பவத்தில் ஒரு இராணுவ அதிகாரியும், அவருடன் சேர்ந்து பயணம் செய்த ஆறு சிப்பாய்களுமாக மொத்தம் ஏழு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், காயமடைந்தவர் அப்பகுதியில் பயணம் செய்த வாகனம் ஒன்றின் உதவியுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் படைத்தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இக் கிளைமோரில் அகப்பட்ட உழவு இயத்திரம் சுமார் 75 மீற்றர் தூரம் வரை இழுபட்டுச் சென்று வீதியில் அருகில் உள்ள பாலத்தின் நடுகற்களை உடைத்து தடம் புரண்டு தீப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்திற்கு கல்வியங்காடு மற்றும் இருபாலைச் சந்தியில் உள்ள இராணுவத்தினர் விரைந்து சென்ற தோடு அப்பகுதியில் நின்ற மக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன் அப்பாதையால் போக்குவரத்துச் செய்யாது வீதித் தடைகளை ஏற்படுத்தியதாகவும் வர்த்தக நிலையங்களைக் கொள்ளை யிட்டதாகவும், தெரிய வருகிறது.

குறிப்பிட்ட இடத்திற்கு ஊடகவியலாளர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் பத்திரிகையாளர்கள் முறையிட்ட போதிலும் அவர்களும் ஊடகவியலாளர்களை உரிய இடத்திற்கு அழைத்துச் செல்ல மறுத்து விட்டார்கள்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்த சேகரன் உரிய இடத்திற்கு கோப்பாய் பொலிசாருடன் வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டதுடன் மரண விசாரணைக்காக சடலத்தை கொழும்பிற்கு அனுப்பி அறிக்கையை அனுப்பி வைக்கும் படியும் கட்டளையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இருபாலை, கல்வியங்காடு, கோப்பாய், கட்டைப்பிராய் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி சுற்றி வளைப்பினை மேற்கொண்ட இராணுவம் பத்திற்கும் மேற்பட்டோரைக் கைது செய்ததுடன் வீதிகளில் நடமாடியோர் மீது தாக்குதல்களையும் நடத்தியது.

இதன் காரணமாக பருத்தித்துறை வீதிவழியான போக்குவரத்து நேற்று முழுவதும் துண்டிக்கப்பட்டது. அத்துடன் அப் பகுதிகளில் உள்ள கடைகள் இழுத்து மூடப்பட்டதுடன் பொதுமக்களும் தமது வீடுகளை விட்டு வெளியே வரமுடியாதவாறு வீடுகளிலேயே முடக்கமடைந்தனர். (33,37,41,கீ)

### யாழ்.சம்பவங்கள்..

னடி நடவடிக்கைகளை எடுத்து அவற்றை நிறுத்த வேண்டும் அதனடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவது அவசியம்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட சில காலமாக புலிகளுடன் நாம் பேச்சுக்களை நடத்தவில்லை. எனவே உடனடியாகப் புலிகளுடன் பேசுவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம் இதற்குப் புலிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் 25 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருவதாகப் புலிகள் கூறிவருகிறார்கள். ஆனால் எமது கணிப்பீட்டின் படி 17 ஆயிரம் குடும்பங்கள் தான் அங்கு வசித்து வந்தன. அதிலும் எண்ணாயிரம் குடும்பங்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டன.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய அசௌகரியங்கள் எமக்கும் தெரிகிறது. ஆனால் யாழ்.இல் இருக்கின்றன. இராணுவத்தினருக்கான முக்கியமான விநியோக மையங்கள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களில் இருக்கின்றன இதனை இரண்டு, மூன்று கிலோமீற்றர்களுக்குள் வைத்திருக்க முடியாது. எனவே இதில் மாற்றம் எதுவும் செய்யமுடியாது என்றார். தேசியப்பிரச்சினை தொடர்பாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை அனுசரித்து நடந்து சிறிலங்கா இராணுவத்திற்குத் தொண்டாற்றும் கடப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் பதினெட்டாவது இராணுவத் தளபதியாக லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா பதவியேற்றுள்ளார்.

நேற்றுக்காலை இராணுவத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட வைபவத்தின் பின்னர் புதிய இராணுவத் தளபதி தனது கடமைகளை ஆரம்பித்தார். இதன்போது சிங்க அணியினரின் அணிவகுப்பொன்றும் இடம்பெற்றது.

புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா 1970ஆம் ஆண்டு பெப்ரவரி ஐந்தாம் திகதி கடெட் உத்தியோகத்தராக இராணுவத்தில் இணைந்து 1971ஆம் ஆண்டு யூன் முதலாம் திகதி சிங்க அணியின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

சிங்க அணியில் இருந்து முதன் முதலாக இராணுவ அதிகாரியாக இவரே பதவி ஏற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் போன்ற பல நாடுகளில் விசேட இராணுவப் பயிற்சி பெற்ற இவர் ரணவிக்கிரம, ரணசுறு போன்ற பதக்கங்களையும் பெற்றுள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.